Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## மதுவும், நாடார்களும்.

**கைவல்ய சாமியார் "குடியரசு" பத்திரிகையில் எழுதுவதாவது:—**

மது உற்பத்தி செய்வதினாலும், அதில் சம்மந்தப்பட்டிருப்பதினாலும் சான்றார்களை சில கோவில்களில் விடுவதில்லை என்று சிலர் நியாயம் சொல்லுகிறார்கள். நியாயம் அழகாயிருந்தாலும் உண்மைத் தத்துவம் அவர்கள் சொல்லுவது போல் இருக்கக் காரணமில்லை. மலையாளத்தில் முக்கிய கோவில்களில் பாப்பான், நாயர் தவிர எந்த ஜாதி இந்துக்களையும்விடுவதில்லை. சைவன், முதலி, நாயுடு முதலிய ஜாதிகள் கள்ளு உற்பத்தி செய்கின்றனவா? இல்லை. என்றாலும் கோவிலுக்குள் விடப்படுவதில்லை. இது ஆக்ஷேபிக்கப்பட்டு நற்சாட்சிப் பத்திரத்துடன் போனால் கோவிலுக்குள் விடப்படுகிறார்களாம். ராமநாதபுரம் ராஜா திருவனந்தபுரம் கோவிலுக்குள் போய் வந்தவுடன் கோவிலை சுத்தம் பண்ணினார்களாம். மருமக்கத்தாயமுடையவர்கள் ராமேஸ்வரக் கோவிலுக்குள் போக ஒரு ரூபாய் காணிக்கை கொடுக்க வேண்டும். மருமக்கத்தாயமென்பது மலையாளத்தில் தான். பார்ப்பானும், நாயரும் சம்மந்தவகையில் ஒத்திருப்பதால் பாப்பானும், நாயரும் தவிர மற்ற ஜாதிக்காரர்களை அந்த ராஜ்ஜியத்தில் தாழ்மையாக நினைக்கிறார்கள். தமிழ் நாட்டில் நாயுடுகளின் ராஜ்ய ஆதிக்கமிருந்த காலத்தில் நாடார்களுடைய பதவி பொருள் முதலிய காரணத்தால் துவேஷித்திருக்கலாம். ஒரு ஜாதி செல்வாக்கடையும்போது இன்னொரு ஜாதியைத் தாழ்த்துவது நம் நாட்டில் நடைபெற்று வந்தேயிருக்கிறது. இப்பொழுதும் விபூதிச் சண்டையும், தேங்காய் முன் பின் உடைக்கும் தகராறும், முன் படிக்கட்டு பின் படிக்கட்டு பாத்தியதைச் சண்டையும் இழிந்த அற்பப் புத்தியாகவிருக்கிறது. நாடார்கள், பூர்வீகத் தமிழர்களாகவும், செல்வாக்குடையவர்களாகவும் இருந்தார்கள் என்பது மெய்யே. நாடான், நாட்டான், நாட்டவன் என்பதெல்லாம் ஊரான் என்னும் அர்த்தத்தையே உடையது. ஊரான் என்னும் பெயர் யார்க்குண்டோ அவர்களுக்கு எல்லாப் பாத்தியதையும் இருந்தே தான் அந்தப் பெயர் வந்திருக்கும். தென்னை, பனைமரம் ஏறும் தொழில், விவசாயத்தையும், கைத்தொழிலையும் பொறுத்தது. நம் நாட்டிற்கு வெகு காலமாகத் தென்னையும், பனையுமே வீடு கட்ட உதவி வருகின்றன. அவையில்லாமல் போனால் நம் குடியிருப்பு நடவாது. அவற்றால் உண்டாகும் நார் நமக்கு இன்றி அமையாதது. நார் முன் அந்நிய நாட்டுக்குப் போனதாகவும் தெரிகிறது. கரும்புக்கு முன்னே பனை, தென்னை சர்க்கரையே இருந்திருக்க வேண்டும். தேங்காயும், பனை நொங்கும், கிழங்கும் நமக்கு ஆகாரம். தேங்கா யில்லாமல் தேவ பூஜையில்லை. பனை ஓலையே முன் காலத்துப் படிப்பும் சாஸ்திரமுமாகும். தென்னையும், பனையும் நம் வாழ்க்கைக்கும், நம் தேசத்திற்கும் பெரும் சொத்து. இதனால் தான் இதற்கு கற்பக விருட்ச மென்றும் சொல்லப்படுகிறது. ஆகாசத்தை யளாவிய இந்த மரத்தின் நுனியிலல்லவா இத்தனை பலனு மிருக்கிறது! அது எப்படிக் கீழே வரும். ஒரு அண்ணன் மரம் வைத்து வளர்த்தான்; ஒரு தம்பி மேலேறி பலனைக் கீழே கொண்டு வந்தான்; மற்றொரு தம்பி கொண்டு வந்த பலனை பாங்கு பண்ணி பலருக்கு விற்றான்; இதுவே உண்மை; தவிர இதில் யாதொரு ஏற்றத் தாழ்வுமில்லை.

ஜனங்களுடைய பொதுவான தொழிலாளித் தனத்திற்கு ஜாதி என்று பெயர். அது ஜனங்களுக்குப் பெரிய விபத்தாய்க் கொண்டு வருகிறது. ஏனெனில் அதில் மிகுந்த லாபமுண்டாகிறது. எனவே உயர்ந்த ஆதர்சங்களின் நியதிகளிலே மனிதருக்குப் பொறுமையில்லாது போகிறது. லாபம் எவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவு ஸ்வார்த்தகம், பொறாமை, விரோதம் இவற்றின் அல்லல் பலமடைகிறது. இவை மனிதர்களின் லாபத்தால் விளைகின்றன. மனிதன் கோப தாப சமயத்திலும் யோசனை பண்ணுவதுண்டு. ஆனால் ஒரு கூட்டத்தின் உணர்ச்சியுடன் கலக்கும்போது யோசனை செய்வதில்லை. அவனுடைய தர்மப் புலன் மழுங்கிப்போகிறது. கூட்ட மனங்களில் உயர்ந்த மனிதத் தன்மையை நசுக்கி விடுவதனால் மிகுந்த பல முண்டாகிறது. ஏனென்றால் கூட்டப் புத்தி இயல்பில் அநாகரீகமானது. இந்த இருளின் பெரிய வலியை ஜாதி தனக்குப் பயன் படுத்திக் கொள்வதில் ஜாக்கிரதையாக விருக்கிறது. நாட்டில் உயர்ந்த ஜாதி என்று சொல்லிக் கொள்ளும் கூட்ட முழுவதும் சேர்ந்து யாதேனுமொரு குறுகிய நோக்கத்திற்கு தம்மைப் பயிற்சி செய்து கொண்டதினால் பிறகு அதையே தளராமல் காத்து போதனை செய்தல் அந்தக் கூட்டத்திற்கு லாபமாகவோ, பெருமையாகவோ, அவசியமாகவோ நினைத்து விடுகிறது. ஒரு சமூக முழுமையும் குறுகின ஆதர்சப்படி பயற்சி செய்வதே ஜாதீயக் கொள்கை. இது நமது நாட்டில் நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது. இதில் அவர்களின் மனம் பற்றி யிருக்கும் போது தர்மக் குறைவும், குருட்டறிவும் விளைவிக்கிறது. அந்த சமயம் தன் லாபமும் செருக்கும் தான் கொண்டிருக்கிறது. இந்த சமயம் கல்வியும், ஆராய்ச்சியும் சிறிது பரவ ஜாதி கட்டுப்பாடு நீங்கி வருகிறது. ஒரு நோய் மூளையைத் தாக்கும்போது அது மிகவும் கடுமையாயிருக்கிறது. ஏனென்றால் எல்லா விதமான வியாதி சக்திகளையும் இடைவிடாமல் முற்றுகை போடுவது மூளையேயாம். அதுபோல ஜாதீயத் தன்னலக் கொள்கையின் உள் நிலை எல்லோருடைய சுயமரியாதையையே தாக்கிக் கொண்டிருக்கின்றதென்று இப்பொழுது உணர்ந்து விட்டார்கள். பல காரியங்களிலுள்ள துன்பமும் அவமானத்தின் சக்தியும் சுயமரியாதையென்னும் மனிதத் தன்மையை முற்றுகை போடுகிறது. எல்லா தேசங்களிலும் சுயமரியாதையோடு வாழும் திருநாளுக்கு தெய்வம் நம்மையும் கூப்பிடுகிறது. அதனால் சுயமரியாதையின் எண்ணம் நமக்குண்டாகிறது. பூசாரி தடுக்கிறான்! பூசாரி தடுக்க நாம்இடம் கொடுக்கலாமாஎன்று கேட்பதற்குக் கூட யாருக்கும் அதிகாரம் இல்லை என்பது சாஸ்திரத்தின் நிச்சயமாம். கழுதை, நரி, முயல் இதன் வயிற்றில் பிறந்த ரிஷி கூட இந்த சாஸ்திரத்தை எழுதி யிருக்கமாட்டார். ஏனென்றால் அதன் வயிற்றில் பிறந்த ரிஷியும் மனித ரூபத்துடனே பிறந்திருக்கிறார். சிறிது பணக்காரன் வந்தால் பூசாரி பல்லைக் காட்டுகிறான். தன்னையும், தன் சாஸ்திரத்தையும் மதிக்காத அந்நிய மதஸ்தனின் ஆதிக்கத்திற்குப் பயந்து உடனே சாஸ்திரத்தை எல்லாம் கட்டிவைத்துவிட்டு அவன் பாதத்தூளியை நக்கிச் சென்று அவனுக்கு எல்லா ஊழியமும் செய்கிறான். சுயமரியாதைத் திருவிழாவை நடத்தும் கடவுளுக்குக் கண் குருடில்லை. இப்படிப்பட்ட வேற்றுமைகளை அவர் பொறுக்கமாட்டார். உள்ளத்தில் பாவம் வெட்கமாகவந்து சுடாவிட்டாலும், வெளியே தெய்வ கோபமாக வந்து சுடுகின்றது. தென்னாப்பிரிக்காவிற்குள் நம்மை விடாததும், ராயல் கமிஷனில் சேர்க்காததும், நம்மவர்களில் முக்கியமானவர்களில் சிலர் "மூட்டை தூக்க ஆளாகவாவது சேர்ந்து கொள்ளுகிறோம். அந்தப் பெருமை இருந்தாலே எங்களுக்குப் போதும். நாங்கள் அதைக்கொண்டே எங்கள் ஊரார்களை ஏமாற்றி பெருமை பாராட்டி பிழைத்துக் கொள்ளுவோம்" என்று வெள்ளைக்காரர்களைத் தாங்கி நடந்தும் ஒரு பதவியும் கிடைக்காமலிருப்பதுவும் தெய்வம் போடும் பாவச்சூடு.

இனி கள்ளைப்பற்றி ஆழ்ந்து கவனிப்போம். பனஞ் சாறு, தென்னஞ் சாறு சர்க்கரைக்காக உண்டாக்கப்பட்டதிலிருந்து தான் கள் உண்டாக்கப்பட்டிருக்கவேண்டும். உலக சுக போகங்கள் விருத்தியானால் மனதை உற்சாகப் படுத்தக் கூடிய மயக்க வஸ்துவும் பண்டு காலந்தொட்டே ஜன சமூகங்களைத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. பிராண்டியைப் பரப்புவதற்காக பேப்பர்கள் உண்டாக வில்லை. லாபத்தைக் கருதி பரப்புவதை விடுவதுமில்லை. தென்னை, பனை ஏறுந்தொழில் கள் விற்பதற்காக உண்டாகவில்லை. லாபத்தைக் கண்டவிடத்து அதை விடவும் முடியவில்லை. கள் கெட்டதுதான். அந்தக் கள்ளின் சம்மந்தத்தால் நாடார்களை விட மற்றவர்கட்கும் எதிலும் பாத்தியதை அதிக மென்று சொல்வதற்கு ஞாயமில்லை. நாடார்களில் சிலரே இந்த தொழில் செய்கிறார்கள். நடு நிலைமையிலிருந்து கள்ளைப்பற்றின விவகாரத்தில் நியாயம் சொல்லுவதானால் நம்முடைய வேதம், புராணம், கோவில், அவதார புருஷர்கள், ஆசாரிகள், இப்போதுள்ள உயர்ந்த சாதிக்காரர்கள் இவ்வளவையும் நெருப்பில் போட்டு எடுத்துப் பின்னும் கோவிலைவிட்டுத் தள்ள வேண்டும்.

வேதங்களில் யாகங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. யாக மென்பது கர்ம காண்டத்தில் கூறப்பட்டுள்ள கர்மங்கள் எல்லாவற்றிலும் மிக முக்கியமானது. இதற்கு ஆராதனை என்றும் பொருள் சொல்லப்படும். யாகங்கள் அநேக விதம். அவைகளில் த்விஜன் அவசியம் செய்ய வேண்டியதாயும், பொதுவாக யாக லக்ஷணங்கள் எல்லாம் அமைந்ததாயும் உள்ளது சோம யாகம். இதைப் பற்றி விரிவாக எழுத "குடி அரசில்" எனக்கு இடமில்லை. நாயக்கரும் பத்திரிகைப் பக்கங்களை அதிகம் பண்ண இனி மேல் நினைக்காமலிருக்கக் காரணமுமில்லை. தன்னலம் கருதும் வைதீகக் கோஷ்டியார்கள் பத்திரிகையின் விரோதத்தை விட்டு விடவுமில்லை. சந்தாதார்களைச் சேர்த்துக் கொடுப்பதிலுள்ள நன்மைக்குச் சிறிது பிரயாசை எடுத்துக் கொள்ளுவதுமில்லை. எனக்குக் கிடைத்த மூன்றும் பக்கத்திலேயே என் கையும், மனமும், நியாயமும் அடங்க வேண்டும். இமய மலையின் சாரலில் அகப்படக் கூடிய சோமக் கொடியின் சாற்றைக் குடிப்பதினால் இந்த யாகத்திற்கு சோம யாகமென்று பேர். இந்த யாகம் ஐந்து நாள் நடக்க வேண்டியது. மூன்று நாள் அநேக காரியங்கள் நடக்கும்; நாலாம் நாள் பிராணி வதம்; கடைசி நாளாகிய ஐந்தாம் நாள்தான் சோம ரசத்தைக் குடிப்பது. நான்காம் நாள் கொடுத்த பலி போக ஐந்தாம் நாள் காலையிலும் அக்கினிக்கென்று ஒரு ஆடு பலி கொடுப்பார்கள் (இரப்பைக் குள்ளிருக்கும் அக்கினிக்கும் ஜாடராக்கினி என்று தான் பெயர்.) அன்று தான் சமாராதனை ஆடல் பாடல்கள் தர்க்கம் நடக்கும். இமயமலைச் சாரலில் தென்னையும் பனையும் கிடையாது. அந்தந்த தேசத்திலிருந்து அகப்படும் சாதனங்களில் அந்தந்த தேசத்தார்கள் கள்ளை உற்பத்தி செய்து கொள்ளுவது போல சோமக் கொடியிலிருந்து உண்டாகும் சாறுக்கு சோம மது வென்று பெயர். இதில் ஒருவித ஆனந்த மில்லாவிட்டால் காட்டிலிருக்கும் கொடிக்கு ஆடு பலியும், பூஜையும் வேண்டியதில்லை. யாகத்திற்குக் கொடியின் பேரான சோம யாக மென்று பேருமிருக்காது. ஸ்ரார்த்தம், யாகம் முதலியவைகளில் மது மாம்சம் இல்லாவிட்டால் செய்தவனும் செய்து வைக்கப்பட்டவனும் நரகத்திற்குப் போகிறார்கள் என்று வேதத்தில் கர்ம காண்டங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. கள்ளைப் பற்றி நினைத்தால் ஆரிய வேதங்களையும், அதைச்சம்பந்தப் பட்டவர்களையும் முதல் முதல் தள்ள வேண்டும். துவாரகையிலிருந்த யாதவர்கள் பிரயாசனுடைய விருந்துக்குப் போய் அளவிற்கு மிஞ்சி குடித்து ஒருவருக்கொருவர் சண்டை செய்து அதில் கிருஷ்ணனுடைய சாரதி கொல்லப்பட்டு கிருஷ்ணன் புல்லைப் பிடுங்கி நெருப்பாக்கி எல்லாரையும் கொன்று அந்தச் சண்டையில் பிரத்யுமன்னன் அனுருத்திரனும் கொல்லப் பட கிருஷ்ணன் கோபம் கொண்டு யாதவ குலத்தையே நாசமாக்கி காட்டிற்குப் போனார் என்ற கதையும் பாரதத்தில் படிக்கிறோம். ராமர் கிருஷ்ணன் கள்ளுண்டார்களென்று ராமாயண பாரதத்திலும் கதைகளில்லாமலில்லை. இன்னும் அநேக புராணங்களிலும் மதுவைக் குடித்து ஆடினதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களையும் இந்தப் புராணங்களையும் தள்ளி வைத்தவர்களில்லை. சங்கராச்சாரியாரும் தன் சிஷ்யனைப் பரிசோதிப்பதற்கு கள் குடித்ததாகக் கதைகள் சொல்லப்படுகின்றன. வைஷ்ணவத்தின் ஒரு பகுதிக்கு ஆசாரியரான வல்லபாச்சாரி மதத்தின் தத்துவம் எல்லா போக போக்கியங்களையும் அனுபவிப்பதே. வல்லபாச்சாரியாருக்கு கிருஷ்ணரே இந்த மத தத்துவத்தை நேராக உபதேசித்ததாகச் சொல்லப்படுகிறது. இவர் விஜய நகரத்திற்கு வந்து அங்கிருந்த வித்வான்களை ஜெயித்து விஜயநகரத்து ராஜாவையும் தன் மதத்தில் சேர்த்துக் கொண்டார். உலக சுகம் அவர்களுக்குத் தள்ளுபடியில்லை. அந்தக் காலத்தில் தான் பாப்பார்களின் ஆதிக்கம் விஜய நகரத்தில் அதிகமாக விருந்தது. சைவர்களில் சில குடும்பத்திற்கு வைஷ்ணவ அய்யங்கார்கள் குருவானதும் இப்பொழுது பணம் வசூல் பண்ணுவதும் ஏற்பட்டது அந்தக் காலமே. மதக்கொடுமையால் அநேகரைத் தாழ்த்தினதும் அந்தக்காலமே. அந்தக் கொடுமையால் அநேகருடைய மனம் கெட்டு விஜய நகர ராஜ்யத்தின் மேல் வெறுப்புக் கொண்டிருந்தமையால் சத்துருக்களால் அழிக்கப்பட்டது. இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஒரு வித்வான் 'பாப்பான் பெருத்து வடுகன் துரைத்தனம் பாழ்த்ததுவே' என்று பாடின காலமுமதுவே. இப்பொழுது இந்து பெரிய கோவில்களிலுள்ள தென்னை மரங்களெல்லாம் கள்ளுக்கு விடப்பட்டு நித்தியம் கள் கோவில்களிலிருந்தே கடைக்குப் போகிறது. இந்தக் கோவிலைத் தள்ளினவர்களில்லை. இன்னும் சில கோவில்களிலுள்ள சித்தர்கள் போகர்கள் வயிரவர்கள் இவர்களுக்கு கள்ளும் கஞ்சாவும் பூஜையாக இருக்கின்றது. இன்னும் காடன், மாடன், கருப்பண்ணன், பொடியன், மதுரை வீரன், பேச்சி, பிடாரி இன்னும் அநேக தெய்வங்களைப் பூஜைபண்ணும் உயர்ந்த இந்துக்கள் குடும்பங்களுமிருக்கின்றன. இதைவிட சக்தி வாதி மதத்தின் பூஜைக்கு கள்ளே பிரதானம். இவைகளை யாரும் குற்றம் சொல்லுகிறதாயில்லை. ஐந்து கோடி ரூபாய் கள்ளினால் வரும்படி. இவ்வளவுக்கு குடிப்பவர்களைத் தள்ளிவைக்கவுமில்லை. கலால் மந்திரியிலிருந்து கலால் சேவகன் வரையிலும் சாராயம் காய்ச்சும் டிப்போ, அதைப்பற்றினவர்கள், அதைப்பரப்பும் பத்திரிகைகள் இத்தியாதிப் பேர்களில் யாரையாவது தள்ளவுமில்லை. சுவாமி, வேதம், கோவில், ஆசாரி, அவதார புருடர்கள், ராஜ தந்திரி, பெரிய ராஜ அதிகாரி இவர்களுக் கெல்லாம் கள்ளின் தர்க்கமே பிரதானமாயிருக்கையில் வீரம் நிறைந்த தமிழரான ஒரு கூட்டத்தார் பேரில் எல்லாப் பாரமும் போடுவதினால் தான் அவர்கள் மனம் புண்ணடைந்து நம்மை வெறுத்து அந்நிய மதம் போய்விடுகிறார்கள். அதன் நஷ்டம் எவ்வளவு சக்தி தெரிகிறதோ அதைப் பொறுத்திருக்கிறது நம் முயர்வு.

## ஆசியக் கொத்து.

அம்மா! ஐயா செத்துப்போனால் மாமா பட்டு வேஷ்டி வாங்கித் தருவாரல்லவா!

அம்—சே! துர்க்குறி, அப்படிச் சொல்லாதேயடா.

---

அடே மணி! உனக்கு அப்பா கிடையாதோ?

மணி—எங்கம்மாளுடைய பாக்கியத்தால் எனக்கு அப்பாக்கள் அநேகம் பேர் உண்டு.

---

சொக்கு! உங்கள் வீட்டில் ஏதேனும் விசேஷ முண்டோ?

சொக்—ஆமாம்; உனக்கு எப்படித் தெரியும்?

பதில்—நீ குளிக்க வந்திருப்பதிலிருந்து அறிந்து கொண்டேன்.

---

போலீஸ்—திருட்டுப் பயலே ஏண்டா திருடினாய்?

திரு—கிரகக்காரன் வேலை ஐயா.

போ—கிரக (வீட்டு) க்காரரே எல்லாம் உமது வேலை தானோ?

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## பொழுதுபோக்கு.

(போய்யில்லான் போறித்தது.)

மாணவர்கள் வளரும் பயிர்களாவர் என்பது மறுக்கொணு உண்மை. அவர்கள் தரும் பிரயோசனக் கதிர் பின்னுலடையக் கிடக்கிறது. இம்மாணவப் பயிர்கள் மணிக்கதிர் விடுவதற்கு தக்க கவனம் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். துன்மார்க்கப் புழு பூச்சிகள் தீண்டிவிடக் கூடாது. மற்றப் பயிர்களைப் போலன்று இம்மாணவப் பயிர்கள். இவைகளே புழுபூச்சிகள் தம்மைத் தீண்டாமல் பார்த்துக்கொள்ள சக்தியுடைத்தன. இச்சக்தியை மதியீனக்காற்று சுழற்றியடிக்கும்போது தான் விட்டு விட்டு துன்மார்க்கப் புழு பூச்சிகள் தீண்ட இடங்கொடுத்து விடுகின்றன. இதனுல், பயிர் கெட்டு கதிர் பதரேயாய் விடுகிறது. இத் துர் லபச் சம்பவம் நிகழாவண்ணமே ஒவ்வொரு மாணவரும் எச்சரிக்கையா யிருக்க வேண்டிய திருக்கிறது. அவர்களே தேசப் போர்முனையில் பின்னணி வீரர்கள். முன்னணி வீரர்கள் களைப்புற்ற காலத்து இவர்களே அவர்களிடத்தைப்பூர்த்தி செய்யவேண்டும். எவ்வகைக்கும் இவர்கள் உருக்கொள்வது மாணவநிலைப் பண்பிலேயேயிருக்கிறது. ஆகையால் மாணவர்கள் துன்மார்க்கப் பாதை விலகி, தமது ஞானச் சுடரை தூண்டி, பிரகாசத்தைப் பரப்பி, கால தேச வர்த்தமானத்தை யறிந்து தம் சுடுபாட்டைப் பக்குவப் படுத்தி வருவார்களாகவும்.

* * *

தாய்மை சார்ந்த பெண்ணினத்தே மக்கள் வலிநிலை பொறுத்திருக்கிறது. தாய்மார்கள் போடும் அஸ்திவாரத்திலேயே பிள்ளைக் கோட்டை வளர வேண்டியிருக்கிறது. இவ்வஸ்திவாரத்தைப் பொறுத்தே கோட்டையுமிருக்கிறது. பலமில்லா அஸ்திவாரத்தில் கட்டிய கோட்டையின் முடிவும் சொல்லல் தேவையோ? மக்கள் வீரப் பிரதாபராயிருக்க தாய்மார்கள் கவனிக்க வேண்டும். எதிர்பார்த்திருக்கும் போருக்கு வீரரைப் பழக்குவதுபோல் பிள்ளைகளை வளர்த்து வருதல் தாய்பாற்பட்ட கடமையாகும். சிவாஜியின் பெருமைக்கு அவரின் தாயாரே காரணம். பிள்ளைகளுக்குரிய ஒளிவும் நலிவும் தாய் மாரைப் பொறுத்ததே. இவ்வழியில் தாய்மார்கள் தவறிழையாதிருக்க உலகம் நோக்குகிறது. மக்கள் நலிவுற்றுப் போக தாய்மார்கள் சம்மதிப்பார்களா? அவர்கள் வாழ்வு நலம் பின்னர் தாய்மார்களையும் சேர்ந்ததல்லவா? தம் நலன் வேண்டியும், மக்கள் உயர்நிலை கருதியும், தேச க்ஷேமம் கோரியும் தாய்மார்கள் மக்கள் வளர்ப்பில் தக்க கவனம் எடுத்து வரும் உயர் நோக்கம் கொள்வார்களாக.

* * *

மதம் என்பது ஓர் ஒழுங்குப்பாடு. இவ்வொழுங்குப்பாடு கடவுளை வழிபடுவதற்காகவும், வரன்முறையின்றி ஜனங்கள் கெட்டழிந்து போகாதிருக்கவும் அக்காலத்து அறிவுடையார்களால் ஏற்படுத்தப்பட்டது. இந்நோக்கத்துடனே ஆக்கப்பட்ட மதங்கள் உலகத்திடை பல வுள. எல்லாம் ஓர் கடவுளையேகுறித்து நிற்கின்றனவாகும். பல பாதைகளில் சென்று ஓர் இடமே போய்ச் சேர்வதாகும். இதனுல் ஒவ்வொரு மதத்தினரும் தம் தம் மதந்தான் கடவுளைக் காணு மதமென்று கொள்வது பொருந்தாது. இந்நியாயம் ஒவ்வொரு மதத்தினருக்கும் வேறுன்றி பிறமத வெறுப்பின்றி தம்மாட்டுமுள்ள ஒழுங்குப்படி இயங்கி வருதலே போற்றத் தக்கதாகும். இஃதின்றி சிலர் தம் மத ஆர்வத்தால் பிறமத விஷயத்தில் இடுக்கண்கள் விளைவித்து வருகிறார்கள். இவ்விடுக்கண்கள் புரிவது இவர்களுக்கு, தம் உண்மைக் கடவுளாரின் பொருட்டென்பதாகும். இது தான் குருட்டுத்தனம். உயர் நோக்காக எம்மதமும் சம்மதமென்றிருத்தலே இறைவன் திருப்தி கொண்டதாகும். வைணவர் விஷ்ணுதான் கடவுள் என்றும், சைவர்கள் சிவன்தானென்றும், கிறிஸ்தவர்கள் கிறிஸ்துதானென்றும், முகமதியர் அல்லாதானென்றும், சமணர்கள் புத்தர்தானென்றும் இப்படி பற்பல மதத்தினர் தாம் தாம் கொண்ட கடவுளையே உண்மைக்கடவுளெனக் கொண்டு வழிபட்டு வருகிறார்கள். இவர்களில் ஒரு மதத்தினர் செய்யும் கிரியை இன்னொரு மதத்தாருக்கு தம் மதாச்சாரப்படி கொதிப்புண்டாக்குகிறது. ஆனுல் கிரியை செய்பவருக்கு, அக்கிரியை இறைவன் அருளுக்குகந்ததாகிறது. இதனுல் இருமதத்தினருக்கும் துவேஷமேற்பட்டு ஒருவரோடொருவர் பொருதி குருதி வெள்ளம் ஓடுகிறது. முடிவென்ன? பின்னும் துவேஷமுற்றலே. எந்தக்கடவுள் உண்மைக் கடவுளோ! அறியோம். அந்த உண்மைக்கடவுளெம் மதத்திலும் தோன்றலாகிறார் என்பது உண்மை. ஆகையால் எல்லோரும் எம்மதமும் சம்மதமின்றிருத்தலே தம் மதமாகக் கொண்டு இறை கிருபைக்காளாவார்களாக.

* * *

இம்மத துவேஷ காரணமாயே வட இந்தியா தத்தளிக்கிறது. ஆங்கு இந்து முஸ்லீம் வேற்றுமை வெக்கை தகிக்கிறது. இந்து முஸ்லீம் பிணக்குத் தீருமட்டும் நாடு விடுதலையடைவது கடுங்காரியமல்ல வென்று மகாத்மா ஆனமட்டிலும் பிணக்குத் தீர்க்கப் பார்த்தார். 21 நாள் பட்டினி கிடந்தும் பார்த்தார். ஒன்றும் பலிக்க வில்லை. சுவாமி சிரத்தானந்தர் கொலையுண்டார். எங்கும் அடிதடிகள். பின் திரு. ஸ்ரீநிவாசய்யங்கார் ஒற்றுமைக்குத் தலையிட்டார். அதுவும் துர்லபமாயிற்று. சிரத்தானந்தரைக் கொன்றவனைத் தூக்கினவன்று டில்லியில் கொள்ளை. இப்படி யின்னும் எவ்வளவு துவேஷம் முற்றி என்ன விபரீதங்களெல்லாம் நடக்க விருக்கின்றனவோ! இப்படி மதம் மதம் என்று மதங்கொண்டு விட்டால் நாட்டில் ஒற்றுமை நிலவுவதெப்போ? இந்தியா சுயராஜ்ய நாடு என விளங்குவதெப்போ? இந்து தலைவர்களும் முகமதிய தலைவர்களும் பிணக்கு தீர்க்கப் பாடுபட்டுத்தான் வருகிறார்கள். ராசி யேற்பட்டுவிடாதா! நாம் ஒரு வீட்டுக்குள் ஒற்றுமையின்றி அடித்துக் கொள்ளத்தானே அயலார் கூசாமல் உள் நுழைந்து அதிகாரம் நடத்தி வருகிறார். வீடு பறிகொடுத்து விட்டுப் பின்னும், நுழைந்தவர் நகைத்துக் கொண்டிருக்க சண்டையிட்டுக் கொண்டிருத்தல் அறிவீனமல்லவா? சண்டையை நிறுத்துவோம். வீட்டை நம் உடந்தையாக்கப் பார்ப்போம். வீடு நுழைந்தவர் உங்கள் சண்டையும், இன்னும் வீட்டிலுள்ள பலரின் சச்சரவும் நீங்கினுல் தான் வீட்டை யுங்களுக்குத் தருவோமென்கிறார். ஆகையால் இந்து முஸ்லீம் சகோதரர்கள் மதத்தை யுன்னி சச்சர்வு செய்துகொள்ளாமல், தேசத்தை முன்னிட்டு மனராசி யேற்பட்டு ஒற்றுமை மிளிரி ஏகோபித்தவராய் நாட்டின் அடிமைத்தனத்தைப் போக்குவார்களாக.

* * *

இம்மதத் துவேஷப்பேய் வட இந்தியாவில் தலை விரித்தாடுகிறது. தென்னிந்தியாவை நோக்கினுலோ வகுப்புத் துவேஷப்பேய் கூத்தாடுகிறது. இவ்விருபேய்களும் முறையேமலை யேறியும், சமுத்திரம்மூழ்கியும் போனுல்தான் நாடு க்ஷேமம் அடையும். ஒரு மதத்திற்குள்ளேயே பல வகுப்புகள் உண்டு பண்ணி நான் பெரியவன்; நீ தாழ்ந்தவன்; என்னைத் தொடாதே; என்னபக்கல் வராதே யென்று ஓலமிடும் மக்கள் தாங்கியுள்ள தென்னிந்தியாவை நோக்கும்போது வட இந்தியாவை சிலாக்கியமாய் நினைக்க வேண்டியிருக்கிறது. வகுப்புத்துவேஷம் பிராமண வடியாய்த் தோன்றியதாகும். பிராமணர்கள் மற்றவரை மிதிகற்களாக உபயோகித்து வந்தகாலம் போய் விட்டதென்பதை நிதர்சனப்படுத்த பிராமணரல்லாதார் இயக்கம் தோன்றியிருக்கிறது. சுயராஜ்யம்! சுயராஜ்யம்!! என்று பறையடித்து வரும் பிராமணர்கள் இவ்வியக்கத்தைக் கண்டு முகஞ் சுளிக்கிறார்கள். பிராமணரல்லாதார் சுயராஜ்யத்திற்கு, இவ்வியக்கமளிக்கும் சமரஸமே ஏற்ற சாதனமென உண்மை யுணர்த்துகிறார்கள். அறிவுடைய தலைவர்களெல்லோரும் இதை யொப்புக்கொண்டு பிராமணர் பிராமணரல்லார் பிணக்குத் தீர்க்க முயன்றுவருகிறார்கள். ஆங்கிலேயர் ஆட்சிக்குட்படக் கூடாதென நினைக்கும் எந்த ஒரு மனிதனும் பிராமண ஆதிக்கத்திற் குள்ளிருக்க மனங்கொள்வானு? இதை யேன் பிராமணர்கள் யூகிக்கக் கூடாது? முதலில் தாங்கள் கீழாக மதித்து வருபவர்களை தங்களுக்குச் சம்மாகப் பாவித்துக் கொண்டல்லவோ ஆங்கிலேயரை இழுக்கவேண்டும். இவ்வழிக்கு வாராமல் சுயராஜ்யம் கேட்பதைப்பார்த்தால், சுயராஜ்யம் கிடைத்துவிட்ட காலத்து தாங்கள் ஆக்ஷிபுரியலாமெனும் நோக்கங் கொண்டது போலல்லோ விருக்கிறது. ஒருக்கால் இங்ஙினே விருப்பினும் அதை மறந்துவிடுவார்களாக. இந்தியா அடிமை நீங்கவேண்டுமெனின் சமரஸம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதுவே பிராமணர் வால் பற்றித் திரியும் ஏனைய ஜாதி இந்துக்களெனப் படுவாருக்கும் கூறும் அறிவாகும். சமரஸமின்றி எந்த சுயராஜ்ய வேலையும் பலிதமாகு மென்பதை கனவிலும் நினைக்க வேண்டாம்.

* * *

ஜாதிக்குதர்க்கம் ஒழியுமாறு திரு. ஸ்ரீநிவாசய்யங்கார் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். இவ்வறிக்கை முற்றுப்பெற்றதொன்றில்லை யெனினும் இதன்படி நடக்க முயலினும் ஒருவாறு நலமாகும். இதை யெத்தனைபேர் ஒப்புக்கொண்டு அனுஷ்டிக்க முன்வருகிறார்களெனப் பார்க்கவேண்டும். இவரதிஷ்டம் எப்படி யிருக்கிறதோ! இந்து முஸ்லீம் பிணக்குத் தீர்த்தது போலாகிவிடுமோ என்னவோ! அப்படியாகிவிடாதிருக்கவே எல்லோரும் எதிர்பார்த்திருக்கிறார்கள். அப்படியு மாமெனின் யாரை நொந்துகொள்வது? இவர் கை ராசியையா? அல்லது சாதி இந்துக்களெனப்படுவாரின் குறும்பையா? எது எப்படியானுலும் சமத்துவம் என்பது ஒழியப் போவதில்லை. எத்தனை இடுக்கண்கள் நேர்ந்தாலும் கடைசியில் சமத்துவமே மேலாடப்போகிறது. திரு. அய்யங்காரின் அறிக்கைப்படியாவதுமுதலாவது நடந்து கொள்வார்களா? நடந்துகொண்டால் அடுத்து முற்றுப் பெற்ற சமத்துவப்படியேறுவாம்.

---

## ஸ்ரீலஸ்ரீ கைவல்ய சாமியார் கவனிக்க வேண்டும்.

சென்ற 4—12—27-ல் வெளியீடான "குடியரசு" பத்திரிகையில் கைவல்ய சாமியார் எனும் கைச் சாத்திட்டு "மதுவும், நாடார்களும்" என்று நீண்டதொரு வியாசம் வரையப்பட்டிருக்கிறது. இதில் இவர் நாடார்களுக்குரிய ஆலயப் பிரவேசத் தடை பற்றி, கள் குறித்து விளக்கிப் பெரிதும் அனுதாபங் காட்டி யிருக்கிறார். இவர் உள்ளூறப் பொதிந்துள நியாய உரைகளுக்குப் பிரதி யுத்தாரம் கொடுப்பதற்கு எவருமில்லை. இத்தகைய அறிவாளிகள் விடும் வச்சிர குடாரப் பிரகடனங்கள் மல்கின், நாட்டிடை சமத்துவம் தழைத்தோங்கும்; சாதி இறுமாப்பினர் கொட்ட மொடுங்கும். இவர் காட்டியுள அனுதாபத்திற்கு நாடார் யாரும் இவரைப் போற்றுதிருக்க முடியாது.

ஆனுல் இவர் நாடார் சமூகத்தை யெடுத்தாண்டிருக்கும் சமயத்து, இச்சமூகத்தின் வரலாற்றையும் குறித்திருந்தால் நலமாயிருந்திருக்கும். நாடார்கள் பூர்வம் தென்னுடாண்ட மன்னர் மரபினர் என்பதை விட்டு விட்டார். நாடான், நாடன், நாட்டவன் என்னும் பதங்கள் அரசன் என்று அர்த்தம் தரும் என்பதை ஒப்புக் கொள்ளக் காணேம். ஷை பதங்களுக்கு ஊரான் என்னும் அர்த்தமே யென வலியுறுத்தி அவ்வூரானுக்கு எப்பாத்தியதையும் உரித்ததென உள்ளர்த்தம் தொனிக்காமல் விடுத்திருக்கிறார். நாடார்கள் கள்ளிறக்கும் தொழில் பூர்வ மிருந்தே கைக் கொண்டிருந்ததாக இவருடைய அபிப்பிராயம் தெரிகிறது. நாடார்கள் பேரில் இதரர் துவேஷங் கொண்டது நாடார்கள் கள்த் தொழிலால் அதி ஊதியமடைந்து வந்ததினுல் என்கிறார். தற்போதிய நாடார் பிரகாசத்தையும் காணேம். இவைகள் தான் பொருத்த மற்றவையா யிருக்கின்றன. இதனுல் சாமியார் நாடார்களைப்பற்றி இன்னும் அதிகம் அறிந்து கொள்ள வேண்டியதிருக்கிறது என்று புலனுகிறது.

இவருடைய நியாயப் பகுதியில் நாடார்களின் வரலாறு இடங் கொள்ளாது போனது விசனிக்கத்தக்கதே. இவ்வளவு அனுதாபங் காட்டு மிவர் நாடார் வரலாறு முற்றிலும் தெரிந்திருந்தால் நாடார்களுக்காக ரத்தக் கண்ணீரும் வடிப்பார். இவர் நாடார்களுக் கனுதாபங் காட்டும் பெருந்தகைமைக்கு நன்றி செலுத்தக் கடப்பாடுளோம் என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, நாடார் சமூக வரலாறு முற்றிலும் தெரிந்து கொள்ள இவரை வேண்டுகின்றனம்.

ஓர் நாடார் குலத்தவன்.

---

## நாடார் மகாஜன சங்கம், மதுரை.

### ஸர். டி. சதாசிவய்யர் அவர்களுக்கு அனுதாபம்.

பாரத தேசத்தின் நலனைக் குறித்து மிக்க உழைத்தவரும், பொது ஜனங்கள்பால் அனுதாபமுடையவரும், சத்தியவந்தரும், மதுரையில் நடைபெற்ற நாடார் மகாஜன சங்கம் 3-வது கான்பரன்வில் தலைமை வகித்து நாடார் உலகத்திற்குப் புத்துயிர் உண்டாக்கிய வருமான ஸ்ரீமான் டி. சதாசிவய்யர் அவர்கள் தனது 67-வது வயதில் இம் மண்ணுலகை நீத்து விண்ணுலகமடைந்ததைக் குறித்து நாங்கள் மிகவும் வருந்துகிறோம். அவரது ஆத்மாவிற்கு சாந்த நிலையைத் தந்தருளும்படியும், அவரது பிரிவால் வருந்தும் அவரது குடும்பத்தினர்களுக்கும், தேச ஊழியர்களுக்கும்ஆறுதலளிக்கும்படியும்எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

### ஸர். பி. ராஜகோபாலாச்சாரியார் அவர்களுக்கு அனுதாபம்.

இந்தியர்கள் வகிப்பதற்குரிய கவர்ன்மெண்டு உத்தியோகங்கள் சகலத்திலும் அமர்ந்து சிறந்து பெயர் விளங்கிய ராஜீய ஞானியும், இந்தியரின் ஐக்கியத்திற்கு அனுசரணையான கலப்பு விவாகத்தைக் கொண்டவரும், விருதுநகரில் நடைபெற்ற நாடார் மகாஜன சங்கம் 5-வது கான்பரன்வில் தலைமை வகித்து நாடார்களுக்கு சிறந்த உபதேசம் செய்தருளியவருமான ஸ்ரீமான் ஸா. பி. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் தமது 65-வது வயதில் பெங்களூரில் இறைவன் திருவடி யடைந்தமையைக் குறித்து மிகவும் விசனிக்கிறோம். அவர்களது ஆத்மா சாந்த நிலையடையும்படியும், அவர்களது குடும்பத்தினர்களுக்கும், நண்பர்களுக்கும் ஆறுதல் தந்தருளும்படியும் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

### அறிவிப்பு.

நாடார் மகாஜன சங்கம் டிராவிலிங் ஏஜெண்டு ஸ்ரீமான் ஏ. எம். எஸ். அண்ணுமலை நாடார் அவர்கள் நாளது 7—12—27 முதல் மதுரை ஜில்லாவில் சுற்றுப்பிரயாணம் செய்வதற்காகப் புறப்படுகிறார்கள். முதலாவது நிலக்கோட்டை, பெரியகுளம் தாலுகாக்களில் சுற்றுப்பிரயாணம் செய்வார்கள். ஆங்காங்குள்ள அபிமானிகள் அன்னவரை வரவேற்றுபசரித்து நமது சங்கத்தின் நன் னேக்கங்களைப் பரவச் செய்வதற்கு வேண்டிய ஒத்தாசைகள் புரியும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

பா. ம. பாண்டிய நாடார்,
ப. வ. சோமசுந்தர நாடார்,
காரியதரிசிகள்.

---

**நம் நாட்டுப் பணம் அந்நிய நாட்டு மில்களுக்குப் போய் விடாது தடுக்க கதர்க் கோட்டை கட்டுங்கள்.**

**அக்கோட்டைக்குள் வைத்து நம் ஏழை மக்கள் பசிப் பிணி தீருங்கள்.**

**நமக்கு வேண்டிய ஆடைகளை நாமே செய்து கொள்வோம். பிறரை யெதிர்பார்க்க வேண்டாம்.**

Tamil Heritage Foundation International Digital Library EBook collection





சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருவுருவத் தன்மை நாம

மேது மின்றி யெப்பொருட்கு மெவ்விட
த்தும் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்

சோதியை மாத்ரா வெளியைமனதவிழ
நிறைவான துரிய வாழ்வைத்

தீதில் பரமாம் பொருளைத் திருவருளை
நினைவாகச் சிந்தை செய்வாம்.

---

நாடார்குலமித்திரன்

பிரபவஞு கார்த்திகை மீ உ௰எ உ

## என்ன வேலை செய்கிறது?

நாடார் மகாஜன சங்கம் 11—வது மகாநாடு முடிந்து இன்று சுமார் இரண்டரை மாதங்களாகியும் இன்னும் கௌன்சில் மீட்டிங் கூடி மகாநாட்டுத் தீர்மானங்களைப்பற்றி பரிசிலனை செய்யப்படவில்லை; முன்னர் கௌன்ஸில் தீர்மானித்த வண்ணம் ஸ்கூல் கிராண்டுப் பணங்கள் கொடுக்கவுமில்லை; சில முக்கிய தீர்மானங்கள் ஜன சமூகத்திடையே பாவுதற்கு சர்க்குலர்கள் அனுப்பப்படவில்லை; ஆகையால் நாடார் மகாஜன சங்கம் **என்ன வேலை செய்கிறது?** என்ற கேள்வி எழும்பி வந்து கொண்டிருக்கிறது.

இவ் வினுவெழும்புவது ஞாயமே. விடை யளிப்பது சங்கத்தின் அதிகாரிகளின் கடமையாகும். சங்கம் அதிகாரிகள் எவ்வளவு சிரத்தை யுடன் தங்கள் வேலைகளைக் கவனித்து வந்த போதிலும், ஜனங்களுக்குள் அடிக்கடி ஏற்படும் மாறுதல்களினலும், அயர்வினலும் இடை யிடையே பல தடைகள் எற்பட்டு வந்து கொண்டிருக்கின்றன. மாறுதலும், அயர்வும், தடைகளு முண்டாவது சகஜம். அவற்றைக் கண்டு அதிகாரிகளும், சீர்திருத்தக்காரர்களும் அயர்ந்து விடக் கூடாது. ஊக்கமும், உற்சாகமும், தன்னம்பிக்கையும், கொண்டு ஜனங்களுடைய அயர்வையும், தவருன மாறுதலையும், தடைகளையும் விலக்கும் வேலையை விடாமற் செய்ய முற்பட வேண்டும். முன்னிற்பவர்களுடைய உற்சாகமும், ஊக்கமுமே ஜனங்களுடைய உற்சாகமும், ஊக்கமுமாகும். ஆகையால் என்ன வருமோ; யாது விளையுமோ வென்று எண்ணுமல் கடமையைச் செய்தால் எல்லா நல்ல வேலைகளும் செய்பவர்க் குடன்பாடாகு மன்றோ? என்ன வேலை செய்கிறது? என்னும் கேள்வி போட்டுக் கொண்டிருப்பவர்களும் சொல்வது தெளிது; செய்த லரிதென்பதைச் சிறிதேனும் சிந்திக்க வேண்டும். தாங்களும் சீர்திருத்தக்காரர்களாகவும் ஆக வேண்டும்.

நமது நண்பர்கள் கே. எஸ். அருணகிரிநாடார், எ. எம். அண்ணமலைநாடார் இவர்கள் முறையே திருநெல்வேலி, மதுரை ஜில்லாக்களில் சுற்றுப்பிரயாணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. முன்னவர் திருநெல்வேலி ஜில்லாவில் சில வருடங்கள் ஸ்திரமாய்த் தங்கி யிருந்து நல்ல வேலைகள் செய்து வந்தார். ஏறல், கூடங்குளம், சாத்தாங்குளம், முக்கூடல், சிதம்பரபுரம் முதலிய பல விடங்களில் பல மகாநாடுகள் கூடும்படி செய்து பொது ஜனங்களுக்குள்ளே மிகுந்த புத்துணர்ச்சி யுண்டாகிறதற்குக் காரணமாயிருந்தார். ௲ சின்னுட்களாய் உடம்பின் அசௌகரியத்தால் விலகி யிருந்து மீண்டும் தம் வேலையை மேற் கொண்டிருக்கிறார். அவருடைய பேச்சு வன்மையும், பேருழியமும் நாடார் சமூகத்திற்குப் பெரிதும் பயன் தாக் கூடும் என்பதில் சிறிதும் சந்தேக மில்லை.

பின்னவரும் மகாஜன சங்கத்துக்கு நீண்ட நாள்ப்பிரசாரகராயிருந்தும், ஏழைமாணவர்கள் சகாயநிதி லாட்டரிக்குத் திறமையுடன் வேலைசெய்தும், கும்பகோணம் மகாநாட்டை மேன்மையுடன் நடத்த மிகுந்த பிரயாசையெடுத்து முள்ளவர். இவ்விருவரையும் சமயோசிதமாக வெளிப் பிரசாரத்திற்கு அனுப்பி யிருப்பது போற்றத்தக்கது. ஆயினும் காரிய தரிசிகள் சில நாட்களாவது அவ்விருவர்களுடன் சென்றிருந்தால் நலமாயிருக்குமென்று நாம் சொல்லாமலே விளங்கும். காரியதரிசிகளும் வைஸ் பிரஸிடெண்டும் மற்றும் ஜனத்தலைவர்களும் பிரசாரம் பண்ணிய காலத்துள்ள கிளர்ச்சி வெகுவாய் அடங்கி விட்டது. மீண்டுமொரு முறை பிரயாணப்படுவார்களானல் பூட்டிய கதவு தானே திறக்கப்பட்டுவிடும்.

காரியதரிஸிகளுக்கும், நாடார் உபதலைவருக்கும் சொந்த வேலைகள் அனேகமிருக்கலாம். இருந்தாலும் ஒரு வருடத்தில் சில நாட்களாவது சமுகப் பிரசாரத்திற்கென்று ஒதுக்கிவைத்துக் கொண்டு கண்டிப்பாய் வேலை செய்தால் ஒருபோதும் குறைவந்து போகாது. மேலும் மேலும் கிளர்ச்சி வலுத்துக் கொண்டே வரும். ஏனையோருக்கும் சமுக ஊழியத்தில் ஊக்கமுண்டாகக் கூடும். ஆங்காங்குள்ள பொது ஸ்தாபனங்களின் நிலைமையும் அபிவிருத்தியாகும். நமது இளைஞருள்ளத்தேயுள்ள நல்லாவல் நன்கு வளர்ந்தேறிவரும். ஆகையால் காரிய தரிசிகளும் மற்றத் தலைவர்களும் நமது கிராமாந்திரங்களிலுள்ள ஏழை மக்கள் முன்னேற்றத்தைக் கண்ணேக்க எப்போது புறப்படுவார்களோ அப்போதுதான் என்ன வேலை செய்கிறது? என்ற கேள்வி இல்லாமற் போகுமென்று நம்புகின்றேம். பிரசாரத்திற்கு வெளியேறியிருக்கும் இரு நண்பர்களும் ஜனேவுற்சாகமும், தலைவர்கள் கூட்டுப் பிரசாரமுமில்லையே என்று உற்சாகங் குன்றிவிடாமல் ஊக்கத்துடன் தங்கள் பிரசாரத்தை நடாத்தி ஆங்காங்கு பொதுக் கூட்டங்களும், தாலுகாவாரி பெரிய கூட்டங்களும் நடாத்த ஏற்பாடு செய்து ஜனங்கள் மனத்தில் மறைந்துகிடக்கும் சக்தியைத் தட்டி எழுப்பி விடுவார்களென்று எதிர் பார்க்கின்றேம்.

---

## குறிப்பு.

### அனுதாபம்.

குருஞ்சிப்பாடி ஜமீன்தாரும், குலாபிமான வள்ளலும், நம்மித்திரனின் போஷகப்பிரபும்நமது11-வது மகாநாட்டின் போது அன்பு கசிந்து தேக்கச்சேரி நடாத்தி யனவளாவிக் கொண்டவரும், நடைபெற விருக்கும் தென்னுற்காடு ஜில்லா நாடார் மகாநாடு நடத்த வரிந்துகட்டி வேலைபுரிந்து வருபவருமான ஸ்ரீமான் த. ரெ. ஜீவரத்தின சாமி நாடாரவர்களின் திருக்குமாரர் ஸ்ரீமான் தண்டபாணி நாடாரவர்கள் சுர நோய்வாய்பட்டு 28–11-27ல் விண்ணுல கெய்தினர் என்பதை யறிந்து மிகவும் வருந்தி யெமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேம். இன்னுர் ஆன்மா சாந்தியடையவும், இவரது பிரிவாற்ருது வருந்தும் இவரது குடும்பத்தார்க்கு ஆறுதலளிக்கவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேம்.

---

### திருமலாபுரம் நாடார்கள்.

### சுயமரியாதை உதயம்.

நிகழ் கார்த்திகை மதி பதினெந்தாம் நாள் புதன்கிழமை யன்று நடந்தேறிய இவ்வூர் திருவாளர் பே. முக்கந்நாடார் அவர்களின் புத்திரன் நிறைவாழ் வுடையோன் இளைய பெருமாளுக்கு, சின்னமனூர் திரு. அய்யம்பெருமாள் நாடார் அவர்களின் புத்திரி திருவளர் செல்வி அமிர்தம்மாளையும், திரு. வன்னிய நாடார் அவர்களின் புத்திரன் கைலாசத்துக்கு, ஈஸ்பர வடிவேல் நாடார் அவர்கள் புதல்வி தாயம்மாளையும், அருமையா நாடார் அவர்களின் புத்திரன் பரமய்யாவுக்கு, ஈ. வெள்ளைய நாடார் அவர்களின் புதல்வி தங்கம்மாளையுமாக நடந்தேறிய மன்றல்கள் மூன்றிலும் பார்ப்பனப் புரோகிதத்தை வேரற வீழ்த்தி இவ்வூர் பிரபல பிரபுவும், சுயமரியாதைப் பெரியாருமாகிய உயர் திருவாளர் அ. செந்திவிளுயக நாடார் அவர்களைக் கொண்டு அமிழ்தினுமினிய நந்தாய் மொழியாம் தமிழில் சடங்குகள் பலவும் மிக்கச் சிறப்புடன் செய்து வைக்கப்பட்டு, அம்மன்றல்கள் முழுதும் மங்களத்துடன் முடி வெய்தியது. இனி இவ்வூர் நாடார் சமூகத்தில் நடக்கும் எச் சுப அசுப சடங்குகளிலும் பார்ப்பனீயம் தலை காட்டா தென்பது திண்ணம் திண்ணம் என்று திரு. ராகவ பெருமாள் "திராவிட" னில் எழுதுகிருர்.

---

### பார்ப்பனிய மொழிந்த திதி.

மாயவரம் தாலுகா குற்ருலத்தில் பிரபல மிராசுதாரரான ஸ்ரீமான் முத்துக்குமாரநாடார் அவர்கள் தம்முடைய தம்பிக்கு, பிராமணுளை நீக்கி உள்ளூர் பண்டாரத்தய்யா அவர்களை வைத்து திதியை மிகவும் விமரிசையாகச் செய்தார். பிராமணுளுக்கு எப்பொழுதும் கொடுக்கும் தானங்களை விட இந்தத் திதிக்கு அதிக சாமான்களுடன் ஏராளமான பரதேசிகளுக்கு அன்னமளிக்கப்பட்டது. இது மிகவும் போற்றத்தக்கது. திதிக்கு வந்திருந்த நாடார்கள் அனைவரும் இனிமேல் நடக்கும் எந்த விசேஷத்திற்கும் பிராமணுளை வைத்து நடத்துவதில்லை என்பதாக ஏகமனதுடன் முடிவுசெய்து கொண்டார்கள். இவ்வூரில் ஒரு ஊாதகாலமாக நிறுவப்பெற்றிருக்கும் "நாடார் சங்கம்" சுயமரியாதையைக் காப்பாற்றுவதற்கு எடுத்துக்கொண்டிருக்கும் தீவிர முயற்சியே இங்கு சுயமரியாதை யுணர்ச்சி யெழுச்சிக்குத் தாயகமாகும் என ஷை சங்கக் காரிய தரிசி எழுதுகிருர்.

---

**சுயமரியாதை வடவா முகாக்கினி கிளம்பி அநீதப் பிராமணீயத்தை எரித்துவருகிறது.**

**இவ் வெரி தணல் வெக்கையால் மக்கள் சுதந்திர தாகங் கொண்டு விட்டார்கள்.**

**சுயராஜ்ய நீர் பருகி தாக சாந்தி கொள்ளட்டும்.**

## சுயமரியாதைப் பேரிடி.

குடையானது மழை தாங்குமேயன்றி இடி தாங்காது? எதுதான் இடியைத் தாங்கவல்லது? ஆனல் பிராமணர்கள் குடை கொண்டு இடி தாங்கலாமெனும் பேதைமதி கொண்டு இடியின் தன்மை தெரியாமல் குடைதன் விரித்து விட்டார்கள். இடிக்குப் பிடித்திருக்கும் இவர்கள் குடைகளை இடுக்கிப் பிடிக்கட்டும் என அறிவுறுத்துவோம்.

சொல்லும் இடிதானென்ன? சுயமரியாதைப் பேரிடி தான். இப்பேரிடி பிராமணர்கள் தலையில் விழாமற் போவதில்லை. இடிவிழுவதற்கான முழக்கம் அதிர்ந்துகொண்டிருக்கிறது. விழும் நேரம் நெருங்கிவிட்டது. இவர்கள் பிறப் புயர்வுப் பேதமையால் இவ்விடிக்குப் பயந்து தற்காப்புக்காக தடைக் குடை பிடித்து நிற்கிருர்கள். இடிமுன் குடை யென்செய்யும்? தடுப்பதில் பயனின்று. தடுப்பானேன்? இவ்விடி அவர்கள் தலைபிளந்து விடாது; ஆனல் அவர்கள் அநியாயத் தலை பிளந்து விடுவது திண்ணம். அவர்கள் சாக மாட்டார்கள்; ஆனல் அவர்கள் சமத்துவமாய் வாழ்ந்து வரவேண்டும் என்பதுறுதி.

அவர்கள் அநியாயத்தலை பிளந்தால் பிறப் புன்னத பீட மிடிந்து சமத்துவத் தரைக்கு வந்துவிடுவார்கள். சகலரும் சமத்துவத்தலை ரயில்தானிருக்க வேண்டுமென்பது தேவ சம்மதமாயிருக்கிறது. உலகவியலிலும் இதுதான் உசிதமாய்க் காண்கிறது. நம் நாடு விடுதலையடைய இதுதான் அடிப்படையாகும் என்றும் தெரிந்துவிட்டது. ஒருவரை மேல் வைத்து இன்னெருவர் காரணமில்லாமல் கீழிருந்து வருவானேன் என்னும் உணர்ச்சி யொவ்வொருவரிடமும் உண்டாயிருக்கிறது. இந்நிலையில் பிராமணர்கள், மேல் இருக்கப் பார்ப்பது பைத்தியகாரத்தனம். பீடத்தை யிடித்துத் தள்ளி தாங்களே இறங்கிவிடுதல் உத்தமம்.

பிராமணர்கள் பிறரை ஏமாற்றிப் பிழைத்தகாலம் போய்விட்டது. ஒருவன் தூங்குகையில் தான் களவு செய்யலாம்; விழிப்புநிலையில் முடியாதென்பதை யவர்கள் அறியவேண்டும். அறிந்தும் ஆனமட்டும் பார்க்கலாமென்று வரிந்து கட்டி நிற்கிருர்கள். இவர்கள் எதிர்ப் பென்செய்யக் கூடும்? சண்டமாருதக் காற்றுடன் கேவலம் பஞ்சென்ன போராடும்?

என்னே இவர்களின் சூஷி! புத்திசாலிகள்தான்; ஆனல் அநியாயக்காரர்கள். வேதம்என்று வகுத்தார்கள். அதை பிரம்மா அருளியதென்று உலகிடை பரப்பினர்கள். 'புத்திமான் பல வானுவான்' என்பது இச் சுய நலக்காரர்கள் பால் பலித்தது. அறியாச் சனங்கள் நம்பினர்கள். நம்பி யிவர்களைக் கும்பிட்டு வந்தார்கள். இவ்வளவு போதாதா இச் சுயநலக்காரர்களுக்கு! எல்லாம் தங்களுக் கடிமை யென்ருக்கி விட்டார்கள்.

அக்கால சக்கரம் இவர்களுக்கேற்ருப்போல் சுற்றிக்கொண்டிருந்தது. எல்லோர் தலையிலும் பாதம் வைத்து நடந்து வந்தார்கள். இப்போதென்ன? வேதம் பொய் யென்ருகிவிட்டது. தலைமேல் வைத்திருந்த பிராமணக் காலை எல்லோரும் தறித்து வருகிருர்கள். எங்கும் சமத்துவப் பேரொலி ஒலித்துக்கொண்டிருக்கிறது. மனு தர்ம சாஸ்திரத்தில் பிராமணச் சூஷி பிளந்துவிட்டது. எனவே மனுஅதர்ம சாஸ்திர மென்ருனது. பொய்யான சாஸ்திரங்களைப் பொசுக்க வேண்டுமென்ற தத்துவங்கொண்டு விட்டார்கள். முதலில் மனு அதர்ம தகனம் நடந்து வருகிறது. இது கண்டு பிராமணர்கள் தங்கள் வீடுகளில் தீப்பிடிப்பதாக வயிற்றி லறைந்து கொள்கிருர்கள். ஏன்? இம்மனு அதர்ம சாஸ்திரந்தான் அவர்களுக்குக் குடியிருப்பு. இதில்தான் அவர்கள் உல்லாச வாழ்வு வாழ்வது. இதில் படுத்துக் கொண்டு தான் எல்லோரையும் ஏவல்புரிவது. இதில் தீப்பட்டால் பொசுக்குண் டெழுக் திருப்பார்கள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



கொளுத்துவோம் மனு அதர்ம சாஸ்திரத்தை! கையில் தீப்பந்தம் எடுங்கள். எங்கெங்கு கிடக்கின்று மூலை முடுக்கெல்லாம் தேடிப் பாருங்கள். பழியேற்ற அச் சாஸ்திரத்தை பஸ்பப் படுத்துங்கள். எந்த நல்ல காரியத்தையும் யாரும் தடுப்பதற்கில்லை. பல தேசங்கள் அவ்வக்காலத்தில் தோன்றிய அநியாய சாஸ்திரங்களைச் சுட்டெரித்திருக்கின்றன. பயப்படவேண்டியதில்லை. கடவுள் பெயரால் அநியாயங்கள் அடக்கியிருக்கிற சாஸ்திரத்தை யெரிப்பதில் கடவுளுக்குப் பிரியந்தான். இவ்வெரிதணல் வெக்கையால் பிராமணர்கள் வெம்பட்டும். அப்போதுதான் சமத்துவத் தண்ணீர் கேட்பார்கள்.

சூடு பொறுக்கமுடியாமல் பிராமணர்கள் துடிக்கிறார்கள். இத்தீ யெங்கிருந்து பற்றியது? சுயமரியாதைப் பேரிடியிலிருந்து சொரிந்து பற்றியது. அவ்விடி அக்கினி கக்கிக்கொண்டு விழவிருக்கிறது. அவ்விடி நெருப்பில் தவறிய ஒரு பொறி நெருப்பில் இவ்வளவு அனலானால், பேரிடி யென் செய்யுமோ வென அவ்விடிக்குத் தப்பிக்க குடைபிடித்து விட்டார்கள்.

திருநெல்வேலி "சுயமரியாதை" சங்கத்தார் மனு அதர்ம சாஸ்திரத்தைக் கொளுத்தினார்கள். அதற்காக இடிக்குக் குடை பிடித்த மாதிரி, புதிதாக ஏற்பட்டிருக்கும் மதத்துவேஷச் சட்டப்படி ஷை சங்கத்தின் பேரில் நடவடிக்கை யெடுக்க சில பிராமணர்கள் தீர்மானம் செய்திருக்கிறார்கள். அத்துடன் இனி இத்தகைய மதத்துவேஷ காரியங்கள் நடைபெறா திருக்கக் கவர்ன் மெண்டார் கவனிக்க வேண்டுமென கவர்ன் மெண்டாரை வேண்டியுமிருக்கின்றனர். இவர்கள் சொல்வதுபோல் இது மதத்துவேஷக் காரியமில்லை. சீர்திருத்த விஷயமே. மனுதர்ம சாஸ்திரம் அநீதக் கொள்கைகள் உடைத்தனவாகையால் அதைப் பறிமுதல் செய்ய யாம் கவர்ன்மெண்டாரை வேண்டவேண்டும். வேண்டின் கவர்ன்மெண்டார் நிறைவேற்றி விடுவாரென்று நினைப்பதற்கில்லை. இப்பறிமுதல் சுயராஜ்யத்திற் கடிப்படையாகையால் மறுத்தேவிடுவர். அவர்களுக்கு சுயராஜ்யப் பயமும், பிராமணர்களுக்கு சுயமரியாதைப் பயமும் இருக்கின்றன. கவர்ன்மெண்டுக்கு இப்போதுதான் சந்தோஷம். பிராமணப் பலம் சேரப்பார்க்கிறது. சுயராஜ்யக் கட்டடம் அசைவு கொடுக்கிறது. எப்படியாயினும் ஆகட்டும்; முதலில் யாம் பெறவேண்டியது சுயமரியாதையே. சுயமரியாதை யின்றேல் சுயராஜ்யமின்று. சுயமரியாதை கொண்டு சுயராஜ்யம் குறிப்போம்.

சுயமரியாதைக் கானியாயுள எந்த சாஸ்திரங்களையும் கொள்கைகளையும் சுட்டெரிக்காமல் போவதில்லை. எரிந்த சாம்பலைப் பிராமணர்கள் கட்டியழட்டும். மனு அதர்ம சாஸ்திரம் எரிப்பதைப் பற்றி யார் யார் தடுத்தாலும் நின்று போகக் கூடாது. நியாயத்திற்கு உயிர் பெரிதல்ல. ஆண்டவன் சந்நிதானத்தில் நியாயத்திற்கே முதலிடமுண்டு. கடவுளை வேண்டியும் நாடு நலங்கோரியும் அதர்மக் கொள்கைகளை அழித்தேவருவோம். தடுப்பதற்குப் பிராமணர்கள் வல்லமையைக் காட்டட்டும். எம்மட்டுமிருக்கிறதென்று பார்ப்போம். கவர்ன் மெண்டார் பாதத்தைப் பிடித்துக் கெஞ்சட்டும்; அவர்களும் உதவிக்கு வரட்டும். யார் வந்தாலும் வரட்டும்! உண்மைக்கு ஒரு போதும் அழிவில்லை. நம் உண்மைத் தத்துவத்தை விடக்கூடாது. எப்போதும் ஏமாற்றிப் பிழைக்கலாமென்றிருந்த பிராமணர்கள், இனிபலிதமாகாதெனத் தெரியுமட்டுந்தான் குதிப்பார்கள். அவர்கள் பிடித்திருக்கும் குடை சுயமரியாதைப் பேரிடியைத் தாங்கப் போவதில்லை. இடிவிழுந்தபின் அறிந்து கொள்வார்கள். இடி விழுமுன்னரமே அநியாயத்தலையைக் கழற்றி யெறிந்து விட்டு சமத்துவக் கட்டத்தில் வந்துவிட்டால் புகழ்ச்சிக் குரியதாகும். என்ன தான் செய்கிறார் களெனப்பார்ப்போம்.

ஓர் சமரஸன்.

## செய்தித்திரட்டு.

கல்கத்தா கார்டன்ரீச் ரோட்டில் மின்சாரக் கம்பி நட்டுவதற்காக பூமிக்குள் 7 பேர்கள் குழிதோண்டிக் கொண்டிருந்தார்களாம். அவ்வமயம் பாரமான சாமானை ஏற்றிச் சென்ற ஒரு மோட்டார் அக்குழியின் அருகில் வர மண் சரிந்து குழியை மூடி விட்டது. அதன் பயனால் ஒருவ ரிறந்தனர். அறுவருக்கு பலத்த காயமேற்பட்டிருக்கிறது.

* * *

புதிய டில்லியில் மேன்மை தங்கிய வைசிராய் அவர்கள் கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தைத் திறந்து வைத்திருக்கிறார்.

* * *

பிரிட்டிஷ் மாதர்களில் ஒருவரையேனும் கமிஷனில் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று லார்டுபர்கென்ஹெட்டிடமும், சர். ஜான் சைமனிடமும் சிலர் கேட்டிருக்கிறார்களாம்.

* * *

சென்னையில் டிசம்பர் 26, 27ந் தேதிகளில், இந்திய சமஸ்தான குடிகளின் மகாநாடு நடைபெறுமாம்.

* * *

சென்னையில், கனியப்பன் என்னும் 7-வயதுள்ள வாலிபன் தன்னிரு நண்பர்களுடன் விளையாடுவதற்குச் சென்று கொருக்குப் பேட்டை ரயில்வே ஸ்டேஷனுக்கருகில் மழை நீர் தங்கியிருக்கும் சகதியில் விழுந்து இறந்துவிட்டானாம். நண்பர்களிவரும் ஓடிவிட்டனராம். பெற்றோர்கள் இரவெல்லாம் தேடி பின் அங்கு கண்டெடுத்தனராம்.

* * *

லண்டன், கென்னிங்டனில் கொள்ளைக் கூட்டத்தார் களவாடச்சென்றனராம். போலீஸார் வெகுதூரம் விரட்டிச் சென்றும் திருடர்கள் பெரிய சுவரேறிக் குதித்தோடி விட்டனராம். போலீஸார் ஏமாந்தனர்.

* * *

ஸ்ரீமான் எஸ். வி. கே. வீரபத்திரஞ் செட்டியார் அவர்கள் அருப்புக்கோட்டை, பாலையம்பட்டிக்கும், ஸ்ரீமான் ஏ. எம். திரவியம் நாடாரவர்கள் தூத்துக்குடிக்கும் கௌரவ மாஜிஸ்ட்ரேட்டாக நியமித்திருக்கின்றனர்.

* * *

பூலோகத்திலேயே மிகப் பெரிய நாடகசாலை பாரிஸில் இருக்கிறதாம். அதன் விஸ்தீரணம் 3 ஏக்கராம். நிலவிலை 42000 பவுனும். கட்டடச் செலவு 15 லட்சம் பவுனும்.

* * *

மாஸ் கோவில் 19 அடி உயரமும், 60 அடி விளிம்புச் சுற்றளவும் 198 டன் நிறையுள்ளதுமான ஒரு மணியிருக்கிறதாம். இது உலகத்தில் பெரிய மணியாம்.

* * *

புதுக்கோட்டை "ஜன மித்திரன்" ஆசிரியர் திரு. பி. எஸ். சுப்பிரமணிய அய்யர் மீது ராஜத் துவேஷ வழக்குத் தொடரப்பட்டு ஒரு வருடக் கடுங்காவலும், ரூ 200-0-0 அபராதமும் விதிக்கப்பட்டார்.

* * *

சென்னையிலுள்ள பிச்சைக்காரர்களுக்காக ராயபுரம், சூரியநாராயண செட்டிதெருவில் ஒரு விடுதி யேற்பட்டிருக்கிறது. அதில் 100 பிச்சைக்காரர்களிருக்கிறார்கள்.

* * *

லக்ஷ்மணபுரி மத்திய சிறைச்சாலை ஜெயிலதிகாரி ஜீ. நாராயண திவாரி என்பார் கைதிகளுக்கு வேலை கொடுத்துக் கொண்டிருக்கையில் கைதிகளால் குத்திக் கொல்லப்பட்டார்.

* * *

அமராவதிக் கருகில் ஓர் வயலில் வேலை பார்த்துக்கொண்டிருந்த ஒருவன் மீது ஒரு புலிபாய்ந்து பிடித்துக் கொள்ள, அமராவதி நார்மன் பள்ளி மாணவன் உகந்தா வென்பவன் அப்புலியைக் கோடாரி கொண்டு காயப்படத் தாக்கப் புலி வெருண்டோடி விட்டதாம்.

* * *

ஹியுபர்ட் என்ற ஜெர்மன் ஒருவர் தன்னைப் பெட்டியில் அடக்கஞ் செய்து தரையில் புதைக்கச் செய்து பின் 17½ நாட்கழித்து பெட்டியைத் திறக்கச் சொல்லி பெட்டியினின்றும் உயிருடன் எழுந்திருக்கும் அரிய வேலை

## ஜீவகாருண்யப் பிரசார சபை, அருப்புக்கோட்டை.

இச்சபையின் அங்கத்தினர் கூட்டம் 8-12-27 வியாழக்கிழமைமாலை 6-மணிக்கு ஷை சபையின் ஹாலில் "நாடார் குல மித்திரன்" அதிபர் ஸ்ரீமான் ரு. ஆ. முத்துநாடார் அவர்களின் தலைமையின் கீழ்க் கூடி, நாளது பிரபவ௵ சித்திரை மீ 1 தேதி முதல் நாளது தேதிவரையும் இந்த சபை செய்து வந்திருக்கிற வேலை விபரங்களும், வரவு செலவு கணக்குகளும் அன்பர் அ. பெ. ரத்தினவேலால் வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளலாகி கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

1. சபையின் கொள்கையைப் பொது ஜனங்களிடையே பரப்புவதற்குத் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும், உபந்நியாசங்கள் மூலமாகவும் தீவிரமாய்ப் பிரசாரங்கள் செய்யவேணும்.

2. மாமிசம் சாப்பிடாதவர்களை மட்டும் மதபேதம் ஜாதிபேதம் பாராமல் சபைக்கு அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளலாம்.

3. வருஷச் சந்தா ரூபாய் ஒன்றும், 16-வயதுக்குக் கீழ்ப்பட்ட வாலிபர்களுக்கு எட்டு அணா சந்தாவுமாக வசூலிக்கவேண்டும்.

4. சபைக்குச் சட்ட திட்டங்கள் ஏற்படுத்தி கீழ்க்கண்டவாறு உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

அன்பர்களான,

ஆ. இ. அண்ணாமலை—தலைவர்

அ. பெ. ரத்தினவேல்—காரியதரிசி.

**நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்கள்.**

சொ. ஆ. சொக்கலிங்க பாண்டியர், ஆ. வி. பால்ஸாமி நாடார், அ. கு. அண்ணாமலை, திரு. பெ. திருமேனிநாதன்.

சபையின் அபிவிர்த்திக்கு நன்கொடை வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க கூட்டத்தில் ஆஜராகியிருந்த சில அன்பர்களிடமிருந்து ரூ 180-0-0 நன்கொடையாக வசூலிக்கப்பெற்றன.

அன்பர்காள்! ஜீவகாருண்யத்தைக் கைக்கொண்டு மாமிச உணவை விடுத்து இந்த சபைக்கு ஒவ்வொருவரும் அங்கத்தினராய்ச் சேர்ந்து ஆதரிக்கும்படியாகவும், சகலரும் தாராளமாய் நன்கொடை கொடுத்துதவும் படியாகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

அ. பெ. ரத்தினவேல்,
காரியதரிசி,
ஜீவகாருண்யப் பிரசார சபை,
அருப்புக்கோட்டை.

---

யை இங்கிலாந்தில் நடத்திவருகிறாராம். இத்தொழிலை இந்தியப் பெயர் ஒன்றையே கொண்டு நடத்தி வருகிறாராம். இந்தியரிடம் கற்ற வித்தையேயென்கிறாராம். இது யோகாப்பியாசமாகும்.

* * *

4—12—27-ல் குடியாத்தத்தில் திராவிட சங்கம் ஆதரவில் நடந்த சுயமரியாதைத் தொண்டர் கூட்டத்தில் "மனுதர்ம சாஸ்திர"ப் பிரதி நெருப்பிட்டுக் கொளுத்தப்பட்டது.

* * *

ஆப்கன் அமீரும், அவரது மனைவியாரும், மற்றும் சகாக்களும் 14-12-27ல் இந்தியாவில் காலடி எடுத்து வைப்பார்களாம். கராச்சி, பாம்பே இவ்விருவிடங்கட்கு மட்டும் வருவாராம். வந்து ஐரோப்பா பிரயாணமாகிறார். வரவேற்பு ஏற்பாடுகள் இந்திய அரசாங்க சார்பாகவும், முஸ்லீம்கள் சார்பாகவும் நடைபெறும். இந்தியாவிற்கு இவரது விஜயம் தனது ராஜிய பாரத்தை ஏற்றுக் கொண்ட பின் இது தான் முதற்றடவையாம்.

* * *

சென்னையில் டிசம்பர் 23 உ கூடப்போகும் 42-வது காங்கிரஸ் மகாசபையின் போது நடைபெற விருக்கும் காட்சி சாலைக்கு நகர் கார்ப்பொரேஷன் ரூபாய் 1000 நன்கொடை யளித்திருக்கிறது.

---

## கனம் ராமநாதபுரம் ராஜா அவர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

ராஜாவே! தங்கள் சமூக சமஸ்தானத்திற்குள்பட்ட கல்லூருணியில் உள்ள கண்மாய்களில் ஒன்றுக்கு "சாணான் குளம்" என்று தங்கள் சமூக சமஸ்தானம், பட்டா முச்சலிக்கா முதலியவைகளில் பதிவு செய்யப்பட்டுவருகிறது.

சான்றார்—சான்றோர் என்பது ஒரு பொருட் கிளவிகளாகும். இதைச் சங்காதி நூற்கள் சான்று பகர்கின்றன. இச்சான்றார்—சான்றோர் என்பதின் மருவுமொழி சாணான் என்பதாகும். இம் மருவுமொழியை வின்ஸிலோ தமிழ் இங்கிலீஷ் அகராதியும், யாழ்ப்பாணம் நா. க. பேரகராதியும் பிற அகராதிகளும் விளக்குகின்றன.

சான்றார்—சான்றோர் என்பது மூல மொழியும் இலக்கணப் பிழையில்லா வார்த்தையுமாகும்.

சாணார்—என்பதோ இலக்கணப் பிழையுற்ற மருவு மொழியும் கல்லார் வாய்ச்சொல்லுமாகும்.

மேலும், இச்சாணார்—சாணான் என்பதை எங்கள் குலத்தவர் மேல் பிறருக்குத் துவேஷமுண்டான காலத்தும், எங்களை இழிவுபடுத்த வேணுமென்று அவர்கள் நினைத்தகாலத்தும் எடுத்தாளுவதால், அதை நாங்கள் முற்றும் வெறுக்கிறோம். இவ்விடயாதிகளனைத்தும் தாங்களறியா தொழிற்தனவல்ல.

ஆகையால் சமூகம் சமஸ்தான பட்டா முச்சலிக்கா முதலியவைகளில் பதிவாகி வந்திருக்கிற சாணான் குளம் என்பதற்குப் பதிலாக "சான்றோர்-குளம்" என்றாவது "சான்றார்குளம்" என்றாவது திருத்திக்கொள்ள உத்தாவு செய்வதுடன், ஷை உத்தரவை சமூகம் சமஸ்தானத் தாலுகா ஆபீசுகளுக்கும், கிராமக்கர்ணங்களுக்கும், ஹெட்மேன்களுக்கும் எச்சரிக்கைப் படுத்த வேணுமாயும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

காரியதரிசி,
"வாலிப நாடார் சங்கம்"
கல்லூருணி.

குறிப்பு:—

கனம் ராஜா அவர்கள் ஒரு ஜாதிக் கௌரதையைப் பாதிக்கும் எச்சொல்லும், செயலும் தம்பாற்பட்ட மட்டும், பிறமுகத்தும் ஒழிக்கப் பின் வாங்குபவ ரில்லையாகையாலும், நாடார் சமூக அனுபவம் அவர்களுக்குப் பேரறியவா றுண்டாகையாலும், நமது 8-வது மகாநாட்டில் தலைமை வகித்து நமக்குப் பரிந்து பேசியவராகையாலும் இவ்வேண்டு கோளின்படி செய்து கொள்வாரென்று உறுதியாய் நம்புகிறோம். இம்மாதிரி சொல் நழுவிய பதப்பிரயோகம் வழக்கத்திலிருக்கும் இடங்களிலுள்ள நாடார் பெருமக்கள் இம்மாதிரியாகத் திருத்தல் செய்து கொள்ளக் கவனிக்கவேண்டும்.

(ப—ர்)

---

## மதிப்புரை.

### இந்துநேசன்.

இவ்வருஷ அனுபந்தம் ஒன்று வரப்பெற்றோம். ஸர். சி. பி. ராமசாமி ஐயர் கே. ஸி. ஐ. இ. அவர்களின் அழகிய திருவுருவப் படமும், மற்றும் பல மேதாவிகள் படங்களும், மகாவிஷ்ணுவின் பத்தவதாரப் படங்களும் பத்தவதாரச் சரித்திரச் சுருக்கமும் அடங்கி யிருப்பதுடன் அரிச்சந்திர புராணம் பாரதம் முதலியவைகளிலுள்ள தர்பார் படங்களின் தோற்றம் மனதைக் கவரத்தக்கதாயுள்ளது. குண சிம்ஹன் அல்லது வனத்தில் நேர்ந்த வில்லங்கங்கள் என்னும் பெரிய நாவலும் மற்றும் பல அரிய விஷயங்களும் அடங்கியுள்ளன. இந்துநேசன் பல நாட்களாக பல வகையிலும் தமிழ்நாட்டிற்குத் தொண்டாற்றி வருவதை மிகவும் பாராட்டி நன்றி கூறுகின்றோம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# ஸத்திய தரிசனம்.

மகாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

பாகம் 4. அத்தியாயம் 27.

## ஆகாரக் கிரமத்தில் இன்னும் பல பரீக்ஷைகள்.

மனோ வாக்கு காயங்களினால் நான் பிரம்மசரிய தர்மத்தை அனுஷ்டிக்க விரும்பினேன். ஸத்தியாக்கிரகப் போராட்டத்தில் என்னுடைய காலத்தில் பெரும் பாகத்தைச் செலவிட வேண்டுமென்றும், அதற்காக என்னைப் பக்குவப் படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் நான் விரும்பினேன். ஆகவே நான் என்னுடைய ஆகாரக்கிரமத்தில் இன்னும் சில மாறுதல்களைச் செய்துகொள்ள வேண்டியிருந்ததுடன், சில நிர்ப்பந்தங்களையும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டியதாயிற்று. இதற்கு முன் சுக வழியை அனுசரித்தே நான் பரீக்ஷைகள் செய்து வந்தேன். பின் மததர்மங்களை அனுசரித்துப் பரீக்ஷைகள் செய்து பார்க்க ஆரம்பித்தேன்.

உபவாஸமும், ஆகாரக் கிரமத்தில் ஒரு வரையறையும் என்னுடைய வாழ்வில் அதிக கவனத்தைப் பெற்று வந்தன. சுவையான ஆகாரங்களில் நாட்டமுள்ளவர்களுக்கு உணர்ச்சியும் அதிகமாக இருப்பது வழக்கம். எனக்கும் அவ்விதமே இருந்துவந்தது. ஆகாரப் பதார்த்தங்களிலுள்ள நாட்டத்தையும் என்னுடைய உணர்ச்சியையும் அடக்கிக்கொள்ள நான் அதிகக் கஷ்டப் பட்டிருக்கிறேன். இப்பொழுதும் நான் அவைகளை வென்று விட்டதாகச் சொல்லிக் கொள்ளுவதற்கில்லை. நான் அதிகமாகச் சாப்பிடுகிறவன் என்பதே என்னுடைய அபிப்பிராயம். நான் சில நிர்ப்பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டிருப்பதாக என்னுடைய நண்பர்கள் நினைத்தபோதிலும் நான் அவைகளை நிர்ப்பந்தங்களாக நினைப்பதில்லை. நான் இப்பொழுது ஏற்படுத்திக் கொண்டிருக்கும் அடக்கத்தை அடைந்திராவிடின், மிருகங்களிலும் கேவல நிலைமைக்குவந்து, வெகு காலத்திற்கு முன்பே என்னுடைய அழிவைத் தேடிக் கொண்டிருப்பேன். இருந்தாலும் என்னிடத்திலுள்ள குறைகளை நான் தெரிந்து கொண்டிருந்ததால் அவைகளை நிவர்த்தி செய்துகொள்ள மிகுந்த சிரமப்பட்டேன். இதனால் இவ்வளவு காலம் என்னுடைய சரீரத்தைக் காப்பாற்றிவந்து, இவ்வளவு வேலையும் செய்வது சாத்தியமாயிற்று.

என்னிடத்தில் உள்ள குறையை நான் தெரிந்து கொண்டிருந்தாலும், எதிர் பாராமலும், சந்துஷ்டிகரமான கோஷ்டிகளுடன் நான் கலந்து கொள்ள நேரிட்டதாலும் ஏகாதேசி தினங்களில் பூரண உபவாசமிருப்பதென்றாவது அல்லது அன்று பழங்களை மட்டில் புசிப்பதென்றாவது நான் சங்கற்பம் செய்துகொண்டேன். இவ்விதமே ஜன் மாஷ்டமி முதலிய இதர விடுமுறை நாட்களிலும் செய்வதென்று முடிவு செய்துகொண்டேன். முதலில் பழங்களை மட்டும் புசிக்க ஆரம்பித்தேன். ஆனால் சரீரத்திற்கு அடக்கத்தை உண்டுபண்ணும் விஷயத்தில் தானிய ஆகாரம் செய்ய முடியாததைப் பழ ஆகாரமானது செய்ததாக எனக்குத் தெரியவில்லை. தான்ய ஆகாரங்களில் பல தினுசுகளில் எவ்விதம் நாட்டம் திரும்பக் கூடுமோ அவ்விதமே பல தினுசுப் பழங்களிலும் நாட்டம் திரும்பலாமென்பதை நான் தெரிந்து கொண்டேன். ஆகவே, விடுமுறை நாட்களில் உபவாஸ மிருக்கவேண்டுமென்றாவது, அல்லது ஒரே வேளை ஆகாரத்துடன் இருக்க வேண்டுமென்றாவது நான் நினைத்தேன். தவிரவும், பிராயச்சித்தம் முதலியவைகளைச் செய்துகொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களிலும் உபவாஸ மிருந்தேன். இவ்விதமாகச் சரீரம் வடிகட்டப்பட்டதும், ஆகாரத்தில் அதிக நாட்டமிருந்ததையும், நன்றாகப் பசி எடுத்ததையும் நான் தெரிந்து கொண்டேன்.

எவ்விதம் ஆகாரத்தைப் பழக்கிக் கொள்ளலாமோ அவ்விதமே உபவாஸ மிருந்தும் பழக்கிக்கொள்ளலா மென்பதை நான் தெரிந்துகொண்டேன். இந்த திடுக்கிடத்தக்க செய்திக்கு எனக்கும் வேறு பல நண்பர்களுக்கும் ஏற்பட்டுள்ள அனுபவங்களை உதாரணமாகச் சொல்லலாம். என்னுடைய சரீரத்தை அபிவிருத்திக்குக் கொண்டுவர அதைப் பழக்கப் படுத்திக்கொள்ள விரும்பினேன். இருந்தாலும் மன அடக்கத்தையும், ருசியான ஆகாரங்களில் நாட்டக் குறைவையும் ஏற்படுத்திக்கொள்ளுவதே என்னுடைய முக்கிய நோக்கமாதலால், ஆகாரத்தின் அளவைக் குறைத்துக்கொண்டு தினுசுகளை அடிக்கடி மாற்றி வந்தேன். என் மனப்படி என் நாவின் சுவையுமிருந்தது. ஒரு ஆகாரத்தை நான் விட்டு விட்டு மற்றொரு ஆகாரத்தை நான் உட்கொள்ளுகையில் அதில் எனக்கு அதிக நாட்டம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

இந்தப் பரீக்ஷைகளை நான் செய்து வருகையில் வேறு சில நண்பர்களும் இவைகளை அனுஷ்டித்து வந்தார்கள். ஹர்மான் காலன்பக் என்பவர் இவர்களில் ஒருவர். தென்னாப்பிரிக்கா ஸத்யாக்கிரக இயக்கத்தைப்பற்றி நான் எழுதியுள்ள வரலாற்றில் இவரைப் பற்றிப் பிரஸ்தாபித்திருப்பதால் அதையே நான் இங்கு மீண்டும் சொல்லப் போவதில்லை. ஸத்யாக்கிரக இயக்கம் மும்முரமாக விருந்த காலத்தில் அவருடைய வீட்டிலேயே நான் வசித்து வந்தேன். ஆகாரக்கிரமத்தில் நாங்கள் செய்துகொண்ட மாறுதல்களைப்பற்றி அடிக்கடி விவாதிப்போம். பழைய ஆகாரத்தைவிட புதிய ஆகாரம் எங்களுக்குத் திருப்தியைக் கொடுத்துக் கொண்டிருந்தது. அந்தக் காலத்தில் இதைப்பற்றிய பேச்சானது வெகு ரஸமாக விருந்தது. இதைப் பற்றிப் பேசுவது தவறென்று எனக்குத் தோன்றவில்லை. இருந்தாலும் இதைப் பற்றி விவாதித்தது பிசகென்பது அனுபவத்தில் இப்பொழுது எனக்குத் தெரியவந்திருக்கிறது. எவரும் இலையைத் திருப்தி செய்வதற்காகச் சாப்பிடாமல் தங்களுடைய சரீரத்தைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காகவே புசிக்க வேண்டும். ஒவ்வொரு உறுப்பும் சரீரத்திற்கு அடங்கி சரீரமானது மனதுக்குக் கட்டுப்பட்டுவிடுகையில் ருசி போய்விடுகிறது. அதற்குப்பிறகு, இயற்கைக்கு ஒவ்விய விதத்தில் சரீரம் வேலை செய்ய ஆரம்பிக்கிறது.

இவ்வித நிலைமை ஏற்படுவதற்கு எத்தனை பரீக்ஷைகள் செய்வதும் குறைவு தான். இதற்காக எவ்வளவு தியாகம் செய்வதும் பெரிதன்று. ஆனால் இக்காலத்தில் மனிதர்கள் இதற்கு எதிரிடையான வழியில் நடந்து கொள்ளுகிறார்கள். அழிந்து போகக்கூடிய நமது சரீரத்தை அலங்கரித்துக்கொண்டு இன்னும் சிறிது காலம் ஜீவித்திருப்பதற்காக பல உயிர்களை வதை செய்வதில் நாம் அவமானமடையவில்லை. இதனால் நமது உடலையும் ஆத்மாவையும் நாம் வதை செய்து கொள்ளுகிறோம். ஒரு பழைய வியாதியை சொஸ்தம் செய்துகொள்ள முயற்சி செய்கையில் நூறு புதிய வியாதிகளை உண்டுபண்ணிக் கொள்ளுகிறோம். உணர்ச்சியைச் சுவைக்க விரும்பி சுகத்தை அனுபவிக்கும் சக்தியையே இழந்துவிடுகிறோம். நம் எதிரிலேயே இவ்விதம் நடைபெறுகிறது. கண்ணிருந்தும் பாராதவர்களாக நாம் இருக்கிறோம்.

ஆகாரக் கிரமப் பரீக்ஷைகளின் நோக்கத்தை நான் மேலே சொல்லிவிட்டதால், நான் செய்த பரீக்ஷைகளின் விவரத்தை இனிச் சொல்லுகிறேன்.

# நாடார் குல அபிமானிகளுக்கோர் வேண்டுகோள்.

அன்புடையீர்! சுதந்திர மென்னும் வானத்தில் அண்ட பிண்ட சராசரங்களும் அதிரும்படியாக சுயமரியாதை என்னும் இருண்ட மேகமானது முழங்கி வருமிது காலத்து, ஒவ்வொரு சமூகத்தினரும் கொஞ்சங் கொஞ்சமாக தாங்கள் கொண்ட மூடக் கொள்கைகளை வேரறுக்க வேண்டிய திருக்கின்றது. அப்படிப்பட்ட மூடக் கொள்கைகளை ஒழிக்காது போயின், சமதரும உலகினின்றும் தள்ளப்படுவது நிச்சயம்.

சுயமரியாதை யென்னும் மழையானது பொதுவாக எல்லோருக்கும் வருஷிக்கக் காத்திருக்கின்றது என்பது வெள்ளிடை மலே. அப்படி எல்லோருக்கும் வருஷிக்கும் காலத்தில் நம் நாடார் ஜன சமூகத்திற்கென சுயமரியாதைத் தனி மதிப்பு இராது. அத்தனி மதிப்புக்குரித்தாராக வேண்டும்; நாம் முன்னேற வேண்டும்; நம் ஜன சமூகம் புகழுடன் நீடூழி வாழ வேண்டும் என்ற உணர்ச்சி நமக்கு இருக்குமாயின் நாம் சம உரிமை யற்ற சகோதரர்களுக்கு சம உரிமை அளிக்க வேண்டும். பொதுவாக மற்றவர்கள் விட்டுக் கொடுத்தால் தான், நாம் விட்டுக் கொடுக்க வேண்டுமென்பது மௌட்டீகத்தனமாகும்.

ஏனையோர்களைப் போல் வாயளவில் நின்று விடாமல், நம் மூடக் கொள்கைகளை ஒழித்து சமத்துவம் கொடுத்தாலன்றி சுதந்திர தேவியார் நம்பால் இரக்கங் கொள்ளார் என்பது வெளிப்படை. நம் சுதந்திரங்களைப் பங்கிடாமல், பூரண சுதந்திரம் பெற முயற்சிப்பது துர்லபமே யாகும். காலத்திற்கேற்றவாறு போவதே சிறந்த தல்லால் வைதீகம் கொண்டிருப்பது கஷ்டங்களை யளிக்கு மென்பது திண்ணம்.

தீண்டாமையை ஒழிக்காமல் சுயராஜ்ஜியம் பெற முடியாதென்று சொன்ன காந்தியடிகளின் தத்துவ உண்மைப் பொருளை ஒவ்வொரு சகோதரரும் உணர்ந்து வைதீகங்களை முழு மனதுடன் பகிஷ்கரிக்க வேண்டும். எல்லா இளைஞர்களும் தங்களுடைய பிதாக்களுக்கும், வைதீகர்களுக்கும் கால சக்கிரத்தின் தன்மையை எடுத்துரைத்து உபகாரம் செய்யாவிடினும் உபத்திரவம் செய்யாதிருக்குமாறு வேண்டிக் கொண்டு, நம்மிடமுள்ள பள்ளிக்கூடங்களிலும், பொது விடங்களிலும் தாழ்ந்தோருக்குச் சம உரிமை யளிக்கப் பாடுபடல் வேண்டும். அப்போது தான் நம் கடமைகளைச் சரிவரச் செய்தவர்களாகின்றோம். “நல்லாண்மை யென்ப தொருவர்க்குத் தான் பிறந்த, இல்லாண்மையாக்கிக் கொளல்” என்ற நாயனார் வாக்கின் உண்மையைக் கடைப் பிடித்தவர்களாகின்றோம்.

தற்பொழுது கோப்பிநாயக்கன்பட்டி க்ஷத்திரிய நாடார்கள் தான் உண்மைக் குலாபிமானிகளும், தேசாபிமானிகளுமானவர்கள். அவர்கள் தான் நம் குல வழிகாட்டி என்று சொல்ல வேண்டும். அவர்களைப் பின்பற்றுவதே நம் நாடார் மக்களின் கடமையாகும்.

ஆதலின் குலாபிமானிகளும், தேசாபிமானிகளும், மற்றும் பெரியோர்களும் முக்கியமாக அருப்புக்கோட்டை, சாத்தூர், தூத்துக்குடி, சிவகாசி, மதுரை, கமுதி, விருதுநகர் முதலிய இடங்களிலுள்ள நாடார்களும், விருதுநகர் நாடார் பரிபாலன சங்கத்தாரும் ஒன்று சேர்ந்து, வரும் வைகாசி மீ' திற்கு பின்னர் நம் பாடசாலைகள் திறக்கும் சமயத்தில், நம் குடி மக்களுக்கும், தாழ்ந்தோருக்கும் சம உரிமை யளிக்க முற்பட வேண்டும். அப்போது தான் நம் அன்னை களிகூர்ந்து நமக்குப் புதிய உணவு கொடுத்து நம்மை புனிதப்படுத்துவாளென்று நினைந்து நம் கடமைகளைச் செய்ய வேண்டிக் கொள்கிறேன்.

ப. வே. ச. பழனிச்சாமி,
விருதுநகர்.

# பொறாமை.

பொறாமை யென்பது கடிந்தெறிய வேண்டிய தீக் குணங்களி லொன்று. பிறர் வாழ்வு நலனைக் கண்டு சகியாமை யென்பது இதன் பொருள். இது, தன்னைக் கொண்ட ஒருவனின் நெஞ்சினில் எரிந்து கொண்டிருக்கிறது. எனவே இது நெஞ் செரிவு எனவும் பேர் கொண்டதாகும். இதன் வாய்ப்பட்ட ஒருவரின் நிலை, குலையுற்றதேயாகும். சந்தோஷச் சலனம் இவர்பால் இன்று. பிறர் கேடுற்ற காலத்து தமக்கு வெற்றி கிடைத்ததாகப் பூரிப்பார். பிறர் கேடுற்றால் இவருக்கு வரும் ஊதியம் என்னவோ!

இப் பொறாமை பிறர் கேடு விளைவிக்க பிடரி பிடித் துந்துகிறது. இவ்வுந்தலுடன் போந்து அறிவிலிகள் இடுக்கண்கள் இழைக்கின்றனர். இவ்விடுக்கண்களால் பிறர் நலிவுறுவது கண்டு தம் மகத்தே இறும்பூ தெய்துகின்றனர். “கெடுவான் கேடு நினைப்பான்” என்பது இன்னனையாருக் கறிவுறுத்தல் பொருட்டே ஆக்கப்பட்டது. இந் நீதிப்படி இன்னாரையே கேடு சூழ்கின்றது. இவர் நெஞ் செரிவினால் பிறர் கருகிவிடினும் அவ்வினை சூழல் இவரைச் சுற்றிக் கொள்கிறது. இது தெய்வம்போடும் பாவச் சூடு. ஆகலான் பொறாமையை தனக்குக் கேடு தரும் பகைவனென்றே சாற்றல் தகும்.

இப்பொறாமைப் பேய் எல்லோரையுமே பிடித்தாட்டுகிறது. இதற்கு இன்னார்தானென்று குறி கிடையாது. கற்றோர் கல்லாதார், தனவந்தர் தரித்திரர், பெரியவர் சிறியவர், ஆணினம் பெண்ணினம் எனும் வித்தியாசமின்றி எல்லோர் மாட்டும் தாண்டவமாடும். தன் தாண்டவக் கால் ஊன்றின மாத்திரத்திலே பிறர் வாழ்வு கண்டு பெரு மூச்செறிகிறார். எப்படியும் அவ்வாழ்வு ஈனப்பட தியானங் கொள்கிறார். அந்தர் முகத்திலும், பகிர் முகத்திலும் இன்னல் விளைவிப்பர். இது அநியாயப் பக்கம் சார்ந்தது. அநியாயம் இளம் புல்லுக்குச் சமானம். நீடித்த நாள் பசிந்து செழித்திராமல் காய்ந்து போகக் கூடியது. ஆகலான் இவர் விதைத்த வினைப் பயிரினின்றும் விளைந்த வினைக் கதிர் அறுக்க வேண்டுபவராகுகிறார். இவர் வீசி வைத்திருந்த வஞ்சக வலையில் தாமே சிக்குண்டு தவிக்கிறார். கண்டோ ரெல்லாம் கை கொட்டி நகைத்துப் புத்தி சொல்லுவார்கள். அது சமயம் இவர் நாணுதலைத் தவிர வேறொன்றுஞ் செய்வதற்கில்லை.

இதனாலாய பயன் என்? தம் வாழ்க்கை யளவில் திருப்தி கொண்டிராமல், பிறர் வாழ்க்கை கண்டு பெருந் தணல் மூச்சுவிட்டு, சந்தோஷ நிழலின்றித் தவித்து வெம்பி யிருத்தலோடு, துன்பங்களும் வந்துதொடர்ந்து கொள்கின்றன. இந்நிலையில் இவர்பாடு தான் என்னே! இவர் மனம்போல் வாழ்வு கொண்டார். இக்கஷ்டத்திற்குக் காரணம் இவர் இடங் கொடுத்தேற்ற பொறாமை யன்றோ?

ஆகையால் நா மனைவரும் கேடு தரும் பொறாமையை வீடல் செய்து நீடு சுகம் எய்தி நிமலன் பதம் நாடுவமாக.

எம். பொன்னையா நாடார்,
ஹெந்கலை, கொழும்பு.

# குலசேகரன் பட்டணம்

## இ. ஐ. டி. ரயில்பாதை.

பைப்பு லயன் ஸ்டேஷனிலிருந்து கொடங்காடு, சிவலூர், பண்டாரஞ்செட்டிவிளை, உடன்குடி வரையும் வண்டி விடுவதாக, அதற்காக வேண்டிய நிலங்களை ஒழுங்கு செய்து போயிருக்கிறார்கள்.

போ. நடராஜ்,
சந்தையடியூர்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# சொல்வதை ஆராய்ந்து சொல்; செய்வதை ஆராய்ந்து செய்.

மானிட சரீரத்தின் மான்மியம் அதனின்றும் இயங்கலாகும் சொல்லும், காரியமும் குறித்தேயாகும். இன்னவையில் பிழைத்தோர் எழில் படைத்தாரின்று. சொல்லிலும் செயலிலும் தூய்மை சார்ந்தார் தம்மட்டே சுகிர்த மெய்தலுடன் பிறாலும் புகழற்குரியராவர். வாக்கிலும், கிரியையிலும் மாண்புறுவதெங்கனேவெனின், நிதானபுத்தி கொண்டென்க. எது சொல்லினும், எது செய்யினும் அதனுடன் நிதான புத்தி தோன்பிடித்துச் செல்லுக. அதன் துணைகொண்டிருக்கும் வரை தொடரும் தோஷம் ஒன்றுமிலது. இஃதின்றி இயங்கின், ஆராயாது ஆழக்கிடங்கில் குதித்து அவதியுறுவதேயாம். நிதான புத்தி தோழமையிலா மனிதன் பல பல இக்கட்டுகள் சூழலாவன்.

வாக்கு குறித்து யோசிப்போம். நமது வாய்க்கூண்டிலிருந்து வாக் குருவிகள் தினதினம் கோடானு கோடியாக வெளிக்கிளம்புகின்றன. இக்குருவிகள் மீண்டும் கூண்டில் அடைபடுவனவன்று. முயலினும் முடியாது. வெளிக்கிளம்பி கண்ணுக்குப் புலனாகாது மறைகின்றன. இக்குருவிகள் புறப்படுகையில்தான் நம் தன்மை வெளியாகிறது. வசையும், வாழ்த்தலும், துன்பமும், இன்பமும் இக்குருவிகள் தேடிக்கொடுத்து மறைகின்றன.

இக்குருவிகளொவ்வொன்றும் நிதான புத்தி இரைகொண்டிருப்பின் நிதானமாயே பறந்து செல்லும். எதிர்ப்பட்டார் முகம் குளிர இன்பக்காற்று விசிறி யடித்துப் பறக்கும். ஆகா! இன்பக் குருவி! பொன்கூண்டினின்றும் புறப்பட்டுப் போகிறது!! வளர்த்தானின் மாண்பென்னே!!! என்னும் புகழ்ச்சி தருகிறது.

அவசரபுத்தி இரையெடுத்த குருவியோவெனின், அவசரமாயடித்துப் பறந்து எதிர்ப்பட்டார் முகங்கிழித்து, கண்ணறைந்து பறந்தோடுகிறது. முடிவென்ன? முகங்கிழியுண்டவன் கோபியெனின் குருவி புறப்பட்ட கூண்டுடைபடும்! குருவிவிட்டவனின் பாடு பெரும் பாடு!!. எதிர்ப்பட்டான் நிதானபுத்தி தோழனெனின் அவனுடைய சாபத்திற்காளாகவேண்டும். எனவே நம் வாயினின்றும் ஒவ்வொரு வார்த்தையையும் நிதானித்து வெளியிடல் பெருமை. பிறர்பால் பேச்சுநிகழுகையில் ஒவ்வொரு வார்த்தையையும் சீர்தூக்கிக்கொண்டே பேசவேண்டும். இக்குறிகொண்டு நிகழும் சம்பாஷணையில் விரிவு குறையும். பேச்சுச் சுருக்கத்தில் தான் பெருமை காணக்கிடக்கின்றது. "அகல உழுவதற்கு ஆழ உழு" என்பது அவனியில் ஓர் நீதி. இதன்படி, விரிந்த பேச்சு வைத்துக்கொள்வதினினும் ஆழ்ந்த பேச்சே பெற்றியுடைத்தாம். ஆழ்ந்த பேச்சிலேதான் நிதான புத்தி உள்ளூற செலுத்தப்பட்டுக் கிடக்கிறது. உலகவியலில் நிதானமற்ற பேச்சுக்காரர்கள் உந்தப்படுகிறார்கள். எல்லார்க்கும்வேண்டா வெறுப்புக்களாகிறார்கள். இன்னாரின் வாயினின்றும் வரும்வார்த்தைகள் வார்த்தைகளாக மதிக்கப்படுவதில்லை. விரிப்பானேன்? சுருங்கஆபத்தும், அவமானமும் தமக்குத் தாமே தேடிக் கொள்கிறார்கள் என்பாம்.

இனி செயல்வழி புக்குவாம். இது இன்பமோ, துன்பமோ தருவதில் முந்தியதைப் பார்க்கிலும் மேற்போந்தது. சொல்லளவில் உள்ளதைப் பார்க்கிலும், செய்கையளவில் உள்ளது சாதகம் பாதகம் பெரிதும் தருவதன்றோ? ஆதலான் செய்கையில் நிதான புத்தி தோழன் துணை மிகவும் வேண்டற்பாலது.

ஒரு காரியம் நிகழ்த்த முற்படுகையில் அதன் நிகழ்ச்சியாலாம் பயனை ஓர்ந்து தொடங்கவேண்டும். இன்றேல் மேற்கொப்பிருந்து அடிக்கொப்பு வெட்டுவது போன்றும், மார்புக்கு நேர் துப்பாக்கி வைத்து வேடிக்கையாய் வெடிக்கிளப்பிக்கொள்வது போன்றுமாய் விபரீதச் செய்கைகளில் வந்து விடியும். தம்மாட்டு புரியும் காரியாதிகளில் ஆராயும் புத்திசெலவிடாக்குறையால்தமக்குக் கேடு சம்பாதித்துக் கொள்வதுடன், பிறர் இகழ்ச்சிக்குப் பாண்டமுமாகிறார்கள். தம் காரியத்திலேயே சேதமுறுமிவர்கள் பிறர்மாட்டு வேலைக்கொப்பப் பெறுவரோ? ஆழமறியாது காலை விட்டுக்கொண்டு அலறுவதில் என்ன பயன்?

ஒரு காரியக் கருத்து வெழுச்சியின் போது நிதான புத்தியுடன் எவ்வழி செவ்வழியாம் என யோசித்தல் அவசியம். அவ்யோசனையினின்றும் தெளிந்ததின் பின்னர் கைக்கொள்ளும் காரியம் வெற்றி மணம், இன்பத் தென்றல் வீசிக்கொண்டிருக்கும். ஆத்திர புத்தியில் யோசனைக்கிடமிராது. குறித்த காரியத்தை முடிக்கவே பிடரி பிடித்துத் தள்ளும். இத் தள்ளுதலுடன் போந்தால் எதிரிலுள்ளவற்றில் முட்டிக்கொள்ள வேண்டியதுதான். தள்ளினும் நிதான புத்தி பலம்போட்டு நின்று அது கூறும் விதம் நடக்கப்பார்க்க வேண்டும். ஆராயாது காரியத்தைச் செய்துவிட்டால் அதன் பயனலாய அனர்த்தங்களை யனுபவிக்கவேண்டியதுதான். தம்மட்டும் சுபிக்ஷ நிலையெய்தி, பிறர் நன்மதிப்புக்கும் ஆளாயிருப்பதே மாண்புக்குரியதாகும். இதற்கு நம்மிடமே கைம்மருந்து இருக்கிறது. இதையுபயோகிக்கத் தெரியாது பலவினை சூழல்களுக்குள்ளாகி விடுகிறோம். மருந்து என்ன? புத்தி! அதற்கு வேலை கொடுத்தலே ஆராய்தலாம். அதன் வேலை கொண்டு எப்பேச்சையும், எச்செயலையும் இயற்றுவதே இன்பந்தருவதாகும். ஆகையால் இன்பங்கருதியவரெல்லாம் ஆராய்ந்து பேச, செய்யக் கருத்துக் கொள்ள வேண்டுமெனவறிவார்களாக.

ஓர் யதார்த்தவசனி.

---

# முத்துப் பதக்கம்.

எல்லாம் கடவுள் செயல் என்று கூறிவிட்டால் பாவ புண்ணியங்களும் மக்களைப் பொறுத்ததல்ல.

*　　*

ஆண்டவன் சன்னிதானத்தில் அனைத்துயிரும் ஒன்றே. இவ்வுண்மையறியாத மக்கள் இடைவாழ்வாம் இப்பூமியில் ஏற்றத்தாழ்வு கொண்டு கூத்தாடுகிறார்கள்.

*　　*

வெற்றி பெற்றவிடத்து தம் சாமர்த்தியம் குறித்தும், தோல்வியுற்ற விடத்து தெய்வ சங்கற்பம் குறித்தும் பேசிக்கொள்ளுவது உலக சகஜமாய்ப் போய்விட்டது.

*　　*

யாருக்கும், தனக்கு பிறர் நன்மதிப்பிருக்கிறதெனக் கண்டமாத்திரத்தில் பெருமையுண்டாகிறது. அப்பெருமை வெளிப்படும் போதுதான் அந்நன் மதிப்பு மறைகிறது.

*　　*

நெருப்பில் விழுந்து வாதைப்படும் தேளைப் பரிந்து தூக்கினால் அது நம் கையிலேயே கொட்டிவிடும். இது போலவே புல்லறிவாளர்க்கு உபகாரஞ் செய்யின் பிரதி பலனாக அபகாரம் விளைப்பர்.

*　　*

பெரியாரைப் பிழைத்துப் பேசல் கத்திக்கூர்மையை நாவால் நக்குவதாகும்.

*　　*

ஒவ்வொரு ஜீவராசியும் ஆடிக்கொண்டிருக்கும் பம்பரத்திற்குச் சமானம். பம்பரம் விசையற்றுக் கீழே விழுவதுதான் ஜீவராசி உயிரற்றுப் பிணமாவது.

*　　*

துஷ்டர்களை சவுக்கடி முறையன்றி சாத்வீக முறைகொண்டு திருத்த முயன்றால், திருத்துவோர் அவர்களுக்குப் பைத்திய காரராவர்.

*　　*

ஒருவருடைய செல்வாக்கு தம்மைப் பார்க்கிலும் சிரேஷ்டமானார் முன்னிலையில் தீவட்டியின் கீழ் தீபமாகிறது.

*　　*

ஒரு ஆணையும் ஒரு பெண்ணையும் பிணைத்திருக்கும் காதல் கயிறு எவ்வாயுதத்தாலும் அறுபடாது. ஆனால் அவ்விருவரிலொருவரின் வெறுப் பெனும் நெருப்புப் பொறி விழுந்து விட்டால் படீரென்றற்றுப்போம்.

*　　*

ஒருவர், இன்னொருவரை பயன் கருதி நெருங்கும்போது, அவ்விருவர் சம்பந்தமாய் வெகுநாளைக்கு முன் நடந்த ஒரு அற்ப சங்கதியையும் சொல்லிக்கொள்கிறார்.

*　　*

மனக் குரங்கை வைராக்கியச் சங்கிலியால் கட்டி அறிவுக்கோலால் அடித்துக் கொண்டிருந்தால் தான், அது சேஷ்டை செய்யாமலிருக்கும்.

---

# நல்லொழுக்கம்.

(7—11—27 மித்திரன் தொடர்ச்சி.)

மேற்றிசையாராகிய ஐரோப்பியர், ஆசியாராகிய எம்மேற் கூறுங் குறைகளில், கொள்கைக்கும், செய்கைக்கும் பொருத்த மின்றி யொழுகுந் தன்மை முக்கியமான தொன்றும். ஆசியன் அஞ்ஞானத்தின் பீட மென்றும், அறிவு தெளிந்து மன மொப்பி உண்மைக்கும் மாறாக நம்பத்தக்கவனென்றும் மேனாட்டுப் புலவர் சிலர் கூறியுள்ளார். மேனாட்டாரிடத்தும் அவ்விதக் குற்றம் உளதோ வென விசாரிக்கப் புகுமுன், நம்மவர் ஒழுக்கத்தையே உற்று நோக்கி, வேண்டியவாறு திருத்த முயலுவதே பெரும்பாலும் நன்மை பயக்குமன்றோ? இருதய சமாதானத்தோடு முரணிய வொழுக்கம் மன மொப்பியதினும் குற்றமுடைய தென் புழி, நியாயஞ் சொற்றித் தெளிவிக்கப் புகுதல் அறிவாளர்க்கோர் அவமதிப்பாம். "ஊருடன் கூடிவாழ்", "நிர்வாண தேசத்தில் கோவணங் கட்டி பைத்தியக்காரன்" என நமக்குள் வழங்குவன போலவே ஐரோப்பியருக்குள்ளும் "உரோமாபுரியில் உரோமரைப்போல் நட" "அஞ்ஞானம் ஆநந்தமாகு மிடத்தில் ஞானம் மதியீனமாம்" என்ற பழமொழிகள் நடைபெறுகின்றன. ஒவ்வொருவனும் தன் தன் மனப்படியே எல்லாக் காரியங்களிலும் நடப்பானயின், பல்லோர் கூடிய ஜன சமூக நாகரீக வாழ்க்கை கணப்பொழுதும் நிலைபெறா தென்பது திண்ணம். பல்வேறு ஜன சமூகங்களின் போக்குகளை உற்று நோக்கும் போழ்து, நாகரீகம் பெருகப் பெருக ஒருவன் தன் மனோ பீஷ்டப்படி நடக்கும் சுதந்திரம் நாளடைவில் குறைந்து வருவதைக் காணலாம். அதி மேதாவியாய் விளங்கிய ஆங்கிலக் கலைஞரொருவர் கூறியுள்ள தெதுவெனில்:— "என் அண்டை வீட்டுக்காரன், விஷசுர முதலிய வியாதிகளை எனக்கு உண்டாக்கக் கூடிய அளவு யான் உட்கொள்ளுங் காற்றைத் தன் வீட்டுச் சாக்கடைகளின் அசுத்தத்தால் கெடுப்பானாகில், ஒரு கைத் துப்பாக்கியை (ரிவால்வர்) நீட்டி என்னைக் கொல்லுவதாகப் பயமுறுத்தின லெப்படியோ, அப்படியே என் வாழ் நாளுக்குரிய என் சுதந்திரத்தைக் குறைக்கின்றான். தன் பிள்ளைக்கு அம்மை குத்தாதிருந்தால், என் குழந்தைகள் கண்டெடுத்து உண்ணுமாறு நஞ்சிட்ட அப்பங்களை அவர்களுக் கெதிரில் வைப்பதற்கொப்பான செய்கை செய்கிறான். அவர்களுக்குக் கல்வி போதிக்காமலும், உலக தந்திரங்களிற் பயிற்றாமலும் அவன் வளர்த்து வரின், சிறைச்சாலைகளையும், வேலைக் கூட்டங்களையும், சம்ரக்ஷணை செய்வதற்கு வேண்டிய பண வரிச் சுமையை யதிகரிப்பித்து, என் சுதந்திரத்தைத் தன்னால் கூடிய வரை குறைக்கின்றான். ஜன சமுகத்தின் நாகரீகம் எத்துணை உயர்ந்ததோ அத்துணை அச்சமுகத்தில் ஒவ்வொருவன் செயல்களும் மற்றெல்லோரையும் பாதிக்கின்றன; அத்துணை மற்றோரது சுதந்திரங்களைக் குறைக்காமல் எவனாயினும் ஒரு மனிதன் தவறி நடத்தல் அருமையாகின்றது" என்பதே. ஆதலான், முழுதும் துறந்த ஞானிகளுக்கன்றி ஏனையோருக்கு மனம் போன்ற ஒழுக்கம் கைகூடாததாகின்றது. வேர்தனையுந் துரும்பென்று மதித்துத் திரியும் துறவிகளும் சிற் சில சமயங்களில் உலக வழக்கங்களைக் கிஞ்சித்து அநுசரிக்க வேண்டியதாகும்.

(தொடரும்.)

பொ. நடராஜ்,
சந்தையடியூர்.

---

# அசரீரி வாக்கு.

ஏ மானிடர்களே!

உங்களில் பிறப்பில் உயர்வு தாழ்வு கொள்ளாதீர்கள். அவ்வழியில் வலியிழந்தாரைத் தாழ்த்தி வைத்துப் புரியும் அட்டூழியங்களுக்கு இறைவன் கோபம் கொண்டிருக்கிறார். அவர் சந்நிதானத்தில் எல்லாம் ஒன்று என்பதை அறியுங்கள். பிறப்பு பேதம் ஒழிப்பதற்காக சமத்துவப் பாலன் ஜெனித்திருக்கிறான். அவன் உபதேசம் பெற்றுய்யுங்கள். அநியாயத் தலை கொய்யுங்கள்.

---



## முக்கிய அறிவிப்பு.

சூரிய சந்திர குல க்ஷத்திரிய சிகாமணிகாள்! நம் குலத்தவர் பூர்வம் இத்திராவிட தேசத்தைப் பரிபாலித்து வந்த சூரிய சந்திர குலத்திலுதித்த சேர சோழ பாண்டிய வம்ஸத்தில் வந்த க்ஷத்திரிய குலத்தவர் என "கிரந்தம், தமிழ், தெலுங்கு, இங்கிலீஷ்" ஆகிய பாஷா நூற்களின் ஆதாரவுகளைக் கொண்டு அடியிற் கண்ட நூற்கள் நன்கு விளக்கி எழுதப்பட்டுள்ளன. சில காப்பிகளே கையிருப்பு. ஆர்டருக் கெதிர்பார்க்கின்றேன்.

| | | ரூ அணா பை. |
|---|---|---|
| க்ஷத்திரியகுல விளக்கம் | தபால் சார்ஜ உள்பட | 1—8—0 |
| "க்ஷத்திரிய மித்திரன்" முதல் வால்யம், காப்பி, | தபால் சார்ஜ் உள்பட | 1—8—0 |
| "க்ஷத்திரிய மித்திரன்" | 2–ம் வால்யம், | 1—8—0 |
| ,, | 3–ம் வால்யம், | 1—8—0 |
| ,, | 4–ம் வால்யம், | 1—8—0 |
| ,, | 5–ம் வால்யம், | 1—8—0 |
| ,, | 6–ம் வால்யம், | 1—8—0 |
| ,, | 7–ம் வால்யம், | 1—8—0 |
| க்ஷத்திரியன் விலை | அணா | 0—2—0 |

இதில் அணா 7, வி. பி. தபால் சார்ஜ் ஆகிறது; அதைக் கழிக்கக் காப்பி விலை ரூபாய் ஒன்று ஆகிறது.

விலாசம்:—

த. விஜயதுரைச்சாமி கிராமணி,
"க்ஷத்திரிய மித்திரன்" பத்திராதிபர்,
தண்டையார்பேட்டை, சென்னை.